கோசலைச் செல்வன்

சலைவாணிக்

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

128

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

558

கோசலைச் செல்வன்

C
380

ஆசிரியர் :

ப. நீலகண்டன்

(துணை ஆசிரியர் : " இந்திரா ")

புதுவை ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்
திரு. எம். கோதண்டராமன், எம்.ஏ., பி.எல்.
அவர்கள் முகவுரை

திருச்சிராப்பள்ளி பொன்னையா உயர்நிலைப் பள்ளிக்கூடம்
தலைமைத் தமிழ் ஆசிரியர்
வித்வான் திரு. தி. சி. குழந்தைவேலன் அவர்கள்
அணிந்துரை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்,
தமிழியல் துறை

கலைவாணிக் கழகம்,
செட்டிநாடு

உரிமை ஆசிரியருடையது] [விலை : அணா 10

முதற்பதிப்பு, 1942 ஜூலை

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்.
நூல் வரிசை எண்: 1752
நன்கொடை எண்: 1752

சமர்ப்பணம்

கலாரசிகரும், நல்லறிஞரும், கருணையின்
வடிவமுமான 'இந்திரா' ஆசிரியர்
திரு. ராம. பழனியப்ப செட்டியார்
அவர்களுக்கு.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

உள்ளுறை

எண்		பக்கம்
	என் ஆசை ...	iv
	முகவுரை ...	v
	அணிந்துரை ...	vii
1.	கம்பன் ...	1
2.	மழை வெள்ளத்தோடு பெருகும் கலைவெள்ளம்	11
3.	அமரன் சிருஷ்டித்த அற்புத நாடு ...	22
4.	ஞான பூமி ...	41
5.	அரசு முறை ...	53
6.	அருளுதயம் ...	59

என் ஆசை

கம்பனின் சிறப்பைப் பற்றித் தனியாகக் கூற வேண்டியதில்லை. கம்பன் தமிழ்நாடு முழுமையும் பரவ வேண்டுமென்கிற என் ஆவலைத்தான் எடுத்துக்கூற விரும்புகின்றேன். தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் படிக்கத்தக்க முறையில் இலகுவான விலையில் கம்பனின் புத்தகங்கள் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அதிக விலையில் சில புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. எனவே தமிழ்நாடு முழுமையும் கம்பன் கவி பரவ வேண்டுமானால் மலிவான விலையில் புத்தகங்கள் வெளி வரவேண்டும். கம்ப ராமாயணத்தைப் பல பகுதி களாகப் பிரித்துச் சிறு சிறு நூலாக வெளியிட வேண்டு மென்பதே என் கருத்து. கம்பனின் கவிச்சுவையை தமிழ் மகன் ஒவ்வொருவனும் அனுபவிக்க வேண்டும். என் ஆசை இது. கம்பனைக் கையாள நான் முன் வந்ததற்குக் காரணம் 'அதிகம் தெரிந்தவன்' என்ற அபிப் பிராயத்தால் அல்ல. கம்பன் மீது கொண்ட காதலால்.

...

இதிலடங்கிய கட்டுரைகளை 'இந்திரா'வில் தொடர்ச் சியாக நான் எழுதி வந்தபோதே, பல தமிழன்பர்களும், இலக்கிய நண்பர்களும் 'அவசியம் புத்தகமாக வெளியிட வேண்டும்' என்று உற்சாகமூட்டினர். என்னுடைய ஆசையும் ஓரளவு இதன்மூலம் நிறைவேறுகிறது.

செட்டிநாடு
16—7—42

ப. நீலகண்டன்

முகவுரை

நமது ஒப்புயர்வற்ற அருஞ் செல்வமாகிய கம்பன், நம்மிடையே மீண்டும் தமக்குரிய பதவியைப் பெற வேண்டு மென்னும் ஆர்வம் தமிழ்நாட்டில் தோன்றியுள்ளது. கம் பன் கவிதையின் சொல்லையும், பொருளையும், பாவத்தையும் நன்கு உணர்ந்து அவற்றைப் பிறரும் அனுபவிக்கவேண்டு மென்னும் பேரவாவினை யுடைய திரு. டி. கே. சிதம்பர நாத முதலியார் அவர்களைப்போன்ற அறிஞர்களின் சலியா உழைப்பினால், இன்று கம்பன் உணர்ச்சி தமிழ் நாட்டிலே வேரூன்றிவிட்டது. பலவிடங்களில் இன்று அறிஞர் கள் அருமையான சொற்பொழிவுகள் ஆற்றிவருகின்றனர். தமிழ் மக்கள் உலக மகாகவியாகிய கம்பனுக்குப் பெருமை யளிக்கவும், உரிய மரியாதை செய்யவும், அவனைக் கற்க வும் முற்பட்டிருப்பதானது, தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சிக் கொரு சுப சூசகமாக விளங்குகிறது.

மகாகவியாகிய கம்பனின் கவியின்பத்தை முற்று முணர்தல் எளிதன்று. கம்பன் என்னும் ஆழ்கடலில் பல்லாண்டுகள் மூழ்கித் திளைத்தோர்க்கே அப் பேறு கிடைக்கும். மேலும், தான் உணர்ந்த அக் கவியின்பத்தைப் பிறருக்குப் புலப்படுத்தும் ஆற்றல் எல்லோருக்கும் கைகூடுவதில்லை. ஆதலின், கம்பனை மூல நூலில் அறிந்து சுவைப்பதற்கு வழிகாட்டியாகப் பல கருவி நூல்கள் தமிழ் நாட்டில் எழுவது இன்றியமையாததாகும். மேலும், தமிழ் இலக்கிய அறிவு ஓரளவு படைத்தவர்க்கு மட்டுமன்றி, சாமான்னிய மக்களுக்கும் கம்பனை எளிதில் உணர்த்து வதற்கு உதவியாயுள்ள நூல்கள் பல பரவவேண்டும். இத் தகைய நூல்கள் எல்லோருக்கும் சொற்ப விலையில் கிடைக் கவும் வேண்டும். இவ் வாய்ப்புக்கள் அனைவருக்கும் கிடைக்கும் போதே கம்பன் தமிழ் மக்கள் அனைவருக்கும் உரியவனாவான்.

இன்றியமையாத இத் தேவையை யுணர்ந்தே, "இந்திரா" வின் மூலமாகத் தமிழ்ப் பணி புரிந்துவரும் திரு. ப. நீலகண்டன் அவர்கள் இத் தொகுதியை ஆரம்பித்துள்ளார். "கோசலைச் செல்வன்" என்னும் தலைப் பெயர் பூண்ட இம் முதல் தொகுதியில், கோசலைநாட்டையும், அதன் மன்னனாகிய தயரதனையும், மாதரசி கோசலை பெற்ற மரகதமணியாகிய இராமனின் திருவவதாரத்தையும், கம்பனுடைய சொற்களைக்கொண்டே ஆசிரியர் இனிய எளிய மொழியில் நமக்கு வருணித்துக் காட்டியிருக்கிறார். அவர் தம் மதிநுட்பத்தினால் கடைந்தெடுத்த சில முக்கியமான பாட்டுக்களை வைத்துக்கொண்டு, கம்பனின் கவிக் கண்ணாலேயே அவற்றை நோக்கியும், அவற்றில் பொதிந்துள்ள சிந்தனைகளையும், அழகையும் நமக்குப் புலப் படுத்தியும் அரிய சித்திரங்கள் வரைந்து தந்திருக்கிறார். அவருடைய சொல்லடுக்கும் நடை அழகும் ஆங்காங்கு வீறுகொண்டு கம்பனிடம் பேரார்வம் எழுப்புவதை, இவர் உரை நடையை வாசித்துக்கொண்டு போகும் போதே வாசகர் உணர்வர். அவ்வண்ணம் ஆர்வம் எழுப்புவதே இவரது நோக்கமுமாகும். சுருங்கக் கூறின், கம்பனைக் கற்கவும் சுவைக்கவும் விரும்புவோருக்கெல்லாம் இச் சிறு நூல் பெருந் துணையாக நிற்கின்றது.

இத் தொகுதி முழுதும் ஒன்றன் பின் ஒன்றாக விரைவில் வெளிவர, ஆசிரியருக்கு இறைவனருளும் தமிழ்ப் பெரு மக்களின் ஆதரவும் தடையின்றிக் கிடைக்க வேண்டுமென்பதே எனது தாழ்மையான பிரார்த்தனையாகும்.

இங்ஙனம்,

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்
புதுச்சேரி.
சித்திரபானு, ஆடி 7.

பி. கோதண்டராமன்.

அணிந்துரை

கம்பன் கவி இன்பம் தருவது; சுவை நலந் தோய்ந்தது; நயம் பல செறிந்தது; அணிவகை நிறைந்தது; ஆற்றொழுக்கன்ன அழகிய நடையது; மக்கள் மனப் பண்பை மாண்புடன் பகர்வது; தெளிந்த கருத்துடன் மிளிர்வது.

இன்று தமிழ் நாட்டில் கம்பன் கவிச் சுவையைப் பருகாத தமிழ் மக்களில்லை; பேசாத தமிழ் அறிஞரில்லை; எழுதாத தமிழ்ப் பத்திரிகையில்லை. சிறந்த தமிழ்ப் புலவரும் வியந்து வியந்து பேசுகிறார்; எளிய தமிழ் மாணவனும் புகழ்ந்து புகழ்ந்து களிக்கிறான். ஆண்களும் ஆவலுடன் சுவைக்கின்றனர்; பெண்களும் விருப்புடன் கற்கின்றனர்.

அரசியல் அலுவலில் அமர்ந்தோரிற் பலர் ஓய்வு நேரத்தை உவப்புடன் கழிக்க கம்பன் கவியையே நம்பியுள்ளனர். ஆங்கிலம் படித்து வழக்கறிஞரானோரிற் பலர் கம்பன் கவியிற் கருத்திழுக்கப் பெற்றுத் தமிழறிஞர் போற்றும் தமிழ்ப் புலமை பெற்றுள்ளனர்; சிலர் தமிழ்த் தலைமையும் பெற்றுள்ளனர். கம்பன் கவியிலேயே தம் கால முழுவதையும் கழித்தோர், கழிக்கின்றோர் எத்துணையர்!

இராமன் கதை என்னும் கயிற்றில் கம்பன் கவி என்னும் மணிகள் கோத்த மாலை, இராமாயணம். இதற்கு இராமாவதாரம் என்பது, கம்பன் இட்ட பெயர். இதில் பன்னிற மணிகள் ஒளிர்கின்றன; இடையிடையே முழு மாணிக்கங்களும் சுடர் விடுகின்றன. அம் மாணிக்க மணிகளைத் தனியே எடுத்துக்காட்டும் முயற்சியே இந் நூல்.

கம்பன் கண்ட கனவுலகம் இந்நூலில் இனிது காட்டப் படுகிறது.

ஆசிரியர், கம்ப ராமாயணத்திலிருந்து—கடவுள் வாழ்த்து முதல் திருவவதாரப் படலம் வரையுள்ள பகுதிகளிலிருந்து—சிறந்த செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்; ஒவ்வொரு செய்யுட் கருத்தையும் யாவரும் உணர்ந்து கொள்ளுமாறு தெளிந்த நடையில் முன்னர் விளக்கி, பின்னர், செய்யுளைத் தந்துள்ளார். அன்றி, அவ்வச் செய்யுளின் அடியிலேயே கடின சொற்களுக்குப் பொருள் கொடுத்துள்ளார். இவ்வமைப்பு கம்பன் கவியை நன்கறிந்து சுவைப்பதற்கு எல்லோர்க்கும் உதவி செய்வதாகும்.

ஆசிரியர் திரு. நீலகண்டன் அவர்கள் கம்பன் கவியை எங்ஙனம் சுவைத்துள்ளார் என்பதை அவரது உரைநடை நன்கு வெளியிடுகிறது. கம்பன் கவிச்சுவை பெருகியோடும் விரைந்த நடையிலேயே ஆசிரியர் உரை நடையும் விரைந்து செல்கிறது. கம்பன் கருத்தைத் தெள்ளிதின் விளங்கச் செய்வதில் ஆசிரியர் மிக்க ஆர்வங்காட்டியுள்ளார்.

இலக்கியத் துறையில் ஆசிரியரின் முதல் முயற்சி இது. தொடர்ந்து இம் முறையிலேயே கம்ப ராமாயணத்தின் ஏனைய பகுதிகளும் வெளிவருதல் வேண்டும். ஆசிரியர் அங்ஙனமே செய்ய ஆர்வங்கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. அவர் முயற்சி வெற்றி பெறுக! "கோசலைச் செல்வன்" என்னும் இந்நூல் யாவராலும் வரவேற்கப்பட வேண்டுமென்பதே எனது விருப்பம்.

இங்ஙனம்,

திருவானைக்கா,
13—7—42.

தி. சி. குழந்தைவேலன்.

கோசலைச் செல்வன்

மதுரை காமராசர் ப... அவ...

1. கம்பன்

கம்பன் கவிச் சக்ரவர்த்தி. தெய்வப் புலவன். தமிழில் தலையாய கவி. கம்பனை நன்கு கற்று அன்னிய மொழி பலவற்றையும் அறிந்த அறிவிற் சிறந்தோர், "கம்பன் உலக மகாகவிகளுள்ளே ஒருவன்" என்கின்றனர்.

கம்பன் இதயம் ஒரு கவிதைக் கடல்; அமுதப் பெருக்கு. உணர்ச்சிப் புயல் அமுதக் கடலில் மோதும் பொழுது சிதறும் திவலைகள்தாம் அவன் நமக்கு அளிக்கும் பேரமுதம்.

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின்மீது அவனுக்கு ஏற்பட்ட பக்தி, கவிதையில் பண்பட்டிருந்த அவன் உள்ளத்தில் சண்டமாருதமாகத் தாக்கி, ராமாயணக் காதையாக மிளிர்ந்திருக்கிறது.

கம்பன், கவி இயற்றச் சிந்திக்கவில்லை. வார்த்தைகளுக்காக அகராதியைப் புரட்டவில்லை. எதுகை மோனைகளுக்கு அலையவில்லை. நினைத்தான், பாடினான். பெருக்கெடுத்தது வெள்ளமாக; இடித்ததும் பெய்யும் மேகத்தைப் போல.

தமிழுக்கு அவன் அளித்த ஒப்பற்ற மணி மகுடம் கம்பராமாயணம்.

கம்பன் கவியின் ஒவ்வொரு வரியிலும் ஆழ்ந்த பொருள் கிடக்கிறது. ஒரு மணி நேரமல்ல, ஒரு நாள் முழுமையும் எண்ணி எண்ணி மகிழலாம். ஒரு கவிக்கு, ஒரு வரிக்கு எவ்வளவு சுவையை உண்டாக்கிவிட்டான்! படிக்கப் படிக்கப் பொருள் விரிந்து கொண்டே போகிறது. கணக்கற்றவர் படித்துச் சுவைத்து எண்ணற்றவர் எழுதியாயிற்று. இன்னும் கூட இதைப்பற்றி விரும்புபவர்கள் எல்லோரும் எழுதலாம். அவ்வளவு தூரம் பொருளை உள்ளடக்கிக் கம்பன் கவி இயற்றி விட்டான்.

கவியின் சிறப்பு

அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்(கு) அன்(று) அமுதம் ஈந்த
தம்பிரான் என்னத், தானும் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நரருக்குஇன்(று) அமுத மீந்தான்.

[அம்பிலே - திருப்பாற்கடலில்; சிலையை - மந்தரமலையை; தம்பிரான் - தமது தலைவனை திருமால்; தாலை - நாவாகிய மந்தரமலையை, நம்பு - விரும்புகின்ற.]

முற்காலத்தில் திருமால் மந்தர மலையைக்கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்து விண்ணுலகத்தவரான தேவர்களுக்கு அமுதம் வழங்கினர். அத்திருமாலைத் தலைவனைக்கொண்ட கம்பன்—கவிச்சக்ரவர்த்தி கம்பன்—வரையாது வழங்கும் வள்ளல்—கம்ப நாடுடைய கம்பன்—தன் தலைவனைப் போலத் தமிழ்த் திருப்பாற்கடலிலே, தன் நாவாகிய மந்தர மலையைக் கொண்டு கடைந்து, தற்காலத்தில் இந்நிலவுலகிலுள்ள அனைவருக்கும் அமுதத்தை உண்டாக்கிக் கொடுத்

தான். நமக்கெல்லாம் அமுதம் பருகும் பாக்கியத்தை அளித்தவன் கம்பன். இன்றுள்ளவர்கள், இனி வருபவர்கள், அனைவரும் என்றென்றைக்கும் இந்த அமுதத்தைப் பருகலாம். உண்டவர்கள் மீண்டும் மீண்டும், நவில்தொறும் நவில்தொறும் இதை அள்ளிப் பருகலாம். இறைக்க இறைக்கச் சுரக்கும் அமுதக் கடலைத் திறந்து விட்டு விட்டான் கம்பன். அவன் வள்ளல், அவன் பிறருக்கு அமுத மீந்து அமரனானன்.

செல்வராயினும் சரி, அரசராயினும் சரி, கேட்டதை யெல்லாம் தரக்கூடிய கற்பகத் தருவின் கீழேயே அமர்ந்துவிட்டவராயினும் சரி, அறிஞர்களாயுள்ளவர்களுக்கு நிறைவு ஏற்படாது. இதயம் களிப்பை அடையாது. உண்மையான இதய சுகத்தை விரும்புபவர்களுக்குப் புறச் சுகத்தைமட்டும் அளிக்கவல்ல இவைகள் இருந்தென்ன, இல்லாவிட்டால் தாம் என்ன? இன்பக் களஞ்சியம் கம்பன் கவியிலல்லவா கிடக்கிறது? அதனைப் படித்துப் பருகும் இன்பத்திற்கு வேறு இணை ஏது?

இம்பர் நாட்டில் செல்வம்எலாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்,
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்,
செம்பொன் மேரு அனையபுயத்(து)
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையில்போல்
கற்றோர்க்(கு) இதயம் களியாதே.

[இம்பர் நாட்டில் - இந்நிலவுலகத்தில்; உம்பர் - மேலுலகத்தவர்; கற்பகக்கா ஓங்கு - உயர்ந்து வளர்ந்த கற்பக மரச்சோலை; அனைய - போன்ற; திறல்சேர் - வலிமை யமைந்த.]

வணக்கம்

உலகம் யாவையும் தா(ம்)உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே.

[உள ஆக்கலும் - படைத்தலும்; நிலைபெறுத்தலும் - காத்தலும்; நீக்கலும் - அழித்தலும்; நீங்கலா-நீங்காத; அலகிலா - முடிவில்லாத.]

கவி, தான் எடுத்துக்கொண்ட நூல் இனிது நிறைவேறக் கடவுளை வணங்குகிறான். ஆக்கல், காத்தல், அழித்தல் மூன்று காரியங்களும் இறைவனுக்கு விளையாட்டுக்களாம்! அப்படிப்பட்ட இறைவனுக்கு "நாங்கள் அடைக்கலம்" என்கிறான்.

அவையடக்கம்

'ஆசை வெட்க மறியாது' என்று சொல்வார்கள். மலைப்பைத் தரக்கூடிய காரியமாயிருந்தாலும், அதைச் செய்ய வேண்டுமென்ற ஆசை தோன்றிவிடுமானால், அந்தக் காரியம் சக்திக்கு மீறியது என்பதைக் கூட எண்ணாமல், அதில் இறங்கி விடுகின்றோம். ஆசை; அதற்கு அடுத்தது நம்பிக்கை; பின்னர் உறுதி; இவை ஏற்பட்டவுடன் அநேகமாகக் காரியம் வெற்றி பெற்று விடுவதுண்டு. பின்னால், காரியத்தைச் சாதித்துவிட்ட நாமே,

"இந்தக் காரியம் இவ்வளவு வெற்றிகரமாகவும், விரைவாகவும் முடியுமென்று நாம் எதிர்பார்க்க வில்லையே" என்று ஆச்சரியப்படுகிறோம். கம்பனும் தன்னைப்பற்றி இப்படித்தான் எண்ணிக் கொண் டான் என்று தெரிகிறது. அழகான உதாரணத் தின் மூலம் கம்பன் கூறுகின்றான்.

ஓசை பெற்(று)உயர் பாற்கடல் உற்றுஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென,
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்(று)இக்
காசில் கொற்றத்(து) இராமன் கதைஅரோ !

[பூசை - பூனை; முற்றவும் - (பால்) முழுவதையும்; நக்குபு - நக்குவற்கு; புக்கென - புகுந்தாற்போல; அறைய லுற்றேன் - சொல்லுகின்றேன்; காசில் - குற்றமற்ற; கொற்றத்து - வெற்றியுடைய.]

பாற்கடல்—கொந்தளித்துக் குமுறும் கடல், பெரும் அலைகள் எழுந்து மடிந்து சுருள்கின்றன. இதைக் கண்டது கம்பன் என்றபூனை. ஆசை பிறந்து விட்டது. கொஞ்சம் அருந்தினால் கூட அதற்குத் திருப்தி ஏற்படாது! கடல்முழுமையும் குடித்துவிட எண்ணிற்று அந்தப் பூனை. அப்படியே நக்கிக் குடித்துவிடத் துணிந்து கடலிலும் புகுந்துவிட்டது. என்ன துணிச்சல் இந்தப் பூனைக்கு! கடலின் சிதறிவிழும் திவலைகூட இந்தப் பூனையை இழுத்துக் கொண்டுபோய்விடுமே. அலையே மோதிவிடுமானால் கேட்கவாவேண்டும்? இந்த அபாயங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை ஆசை. 'அம்மாதிரி ஆசை யின் காரணமாக இராமன் கதையைச் சொல்லத் தொடங்கினேன்' என்கிறான் கம்பன்.

ஒருவன் ஒரு காரியத்தில் இறங்குகின்றான். அதில் வெற்றிபெறவில்லை. அவனைப் பார்த்த அறிஞர், "அந்தக் காரியம் அவ்வளவு சுலபமானதா? இவனலெல்லாம் முடியக்கூடியதா?" என்று கூறுவர். அப்பொழுது காரியத்திலிறங்கினவனது ஆற்றாமை தெரிவது ஒரு புறமிருக்க, அவன் எடுத்த காரியத்தின் பெருமை அதிகப்படுகிறது குறிப்பிடத் தக்கதல்லவா? கம்பன் எண்ணிப் பார்க்கின்றான்: "இந்தப் பாமரன்-கல்வி அறிவில்லாதவன்-இராமாயணத்தைப் பாடத் தொடங்கினனே" என்று அறிஞர் கருதலாம். அதனல் எனக்கு இழிவு ஏற்படும். பரவாயில்லை. ஆனல் தெய்வத்தன்மை பொருந்திய பாடலின் மேன்மையை மற்றவர்கள் அறிந்துகொள்வார்களல்லவா? அந்த மாட்சியைத் தெரிவிக்க நான் பாடியதாக இருக்கட்டுமே. வெயிலைக் கண்டதும் தானே நிழலின் அருமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது." கவி வருகிறது, பாருங்கள்:

வையம் என்னை இகழவும், மாசுஎனக்கு
எய்த வும்இது இயம்புவ (து) யாதெனில்,
பொய்யில் கேள்விப் புலமையி னேர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

[வையம் - உலகம்; மாசு - குற்றம்; எய்தவும் - ஏற்படவும்; பொய்யில் - குற்றமற்ற; புகல் - சொல்லியுள்ள தெரிக்கவே - தெரிவிக்கவே.]

ஒரு நூலைப் பிழைபடப் படிப்பதை அறிஞர்கள் கேட்டுச் சகிக்கமாட்டார்கள். அவர்களை வதை செய்ய வேறு ஆயுதமே தேவையில்லை! பிழையாகப் படித்தலும், எழுதுதலும் ஈட்டியைப் போன்று

துன்புறுத்தக் கூடியனவாகும். "ரசிகர்கள் காதில் என் புன்கவி விழும்படி நான் பாடவேண்டியிருக்கிறதே" என்று எண்ணுகிருன்.

துறைய டுத்தவி ருத்தத்தொ கைக்கவிக்(கு)
உறைய டுத்தசெ விகளுக் (கு) ஓதில்,யாழ்
நறைய டுத்த*அ சுண நன் மாச்செவிப்
பறைய டுத்தது போலும்என் பாவரோ!

[துறையடுத்த - பல விகற்பங்களைக்கொண்ட; உறையடுத்த - உறைவிடமாகப் பொருந்திய; நறை - தேன்; நன்மா - நல்ல மிருகம்.]

கம்பன், எதிர்காலத்தை எண்ணுகிருன்; ரசிகர்களை நினைக்கிருன்; தன் கவியைப்பற்றி ரசிகர்கள் என்ன கருதக்கூடுமென்பதை எண்ணிப் பார்க்கிருன்; அஞ்சவும் செய்கிருன். இருந்தாலும் பக்தி விசேஷத்தால் ஏற்பட்ட ஆசை அவனை உந்தித் தள்ளுகிறது. அதனுல் அவன் சமாதானம் சொல்லத் தொடங்குகிருன்:

ஆசை அதிகமானுல் பைத்தியமாக மாறி விடுகிறது. அந்தக் 'கிறுக்கில் உளறு மொழி' பொறுக்க வேண்டியது தானே? மூடர்கள் ஏதாவது உளறினுல் அதைப்பற்றிக் கவலைப் படக் கூடாது. பக்தர்கள்—பக்தர்களா யிருப்பதனுலே பகவானிடத்திலே சொந்தம் பாராட்டுகிருர்கள்; அளவு கடந்த அன்பு காரணமாக இறைவனையே

* அசுணம்—இசையறி விலங்கு. இது இனிய யாழ் ஓசையைக் கேட்டு இன்புறும். பறையொலி கேட்டால் உயிர் நீத்துவிடும்—ரசிகத் தன்மைக்கு எடுத்துக்காட்டு

சுடு சொல்லால் அழைப்பதுண்டு. பகவானிடத்திலே லயப்பட்டுப்போன பக்தனைப் போலத்தான் காதலிலே கட்டுண்ட காதலிகள். காதல் மயக்கத்திலே அவர்கள் சொன்னதையெல்லாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கலாமா? ஏனென்றால் அவர்கள் பித்தர்—பேதையர்—பக்தர்; எனவே, "முத்தமிழையும் குற்றமறக் கற்றுணர்ந்த கவிகளே! என் பாடல்கள் ஆராய்ச்சிக் குரியனவல்ல" என்று கம்பன் கூறுகிறான்.

முத்த மிழ்த்துறை யில்முறை போகிய
உத்த மக்கவி கட்(கு)ஒன்(று) உணர்த்துவன்
பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும்,
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?

[முறை போகிய - கிரமமாகக் கற்றுணர்ந்த; பேதையர் - காதலிகள்; பன்னப்பெறுபவோ - ஆராய்ச்சிக்குரியனவோ.]

இன்னும் சொல்கின்றான்:

சிறு பிள்ளைகள் பெரிய அரண்மனை கட்டுவதாக எண்ணிக்கொண்டு தரையில் கீறுகிறார்கள். பற்பல காரியங்களுக்காகத் தனித்தனி அறைகள் பிரிக்கின்றார்கள். ஒரு நாடக சாலையையும் அமைக்கின்றார்கள். பெரிய அரண்மனை என்றால் எல்லாம் தானே இருக்கவேண்டும்?

தரையில் கீறி விளையாடும் குழந்தைகளின் தன்மையைக் கம்பன் நன்றாகச் சுவைத்திருக்கிறான் என்று தெரிகிறது. மேலே கூறப்பட்ட தரையில் கீறி விளையாடும் கம்பனின் கற்பனைக் குழந்

தைகள் ஞானமுள்ள குழந்தைகள் என்றும் தெரிகிறதல்லவா? சாதாரணக் குழந்தைகளுக்கு, ஒரு அரண்மனையில் இன்னின்ன பகுதிகள் இருக்க வேண்டுமென்று தெரியுமா?

பிள்ளைகள் தரையில் கீறி விடுவதை ஒரு சிற்பி பார்க்கிறான். குழந்தைகளின் செய்கையைக் கண்டு அவன் சந்தோஷப்படுவான் என்று எதிர்பார்க்கலாம்; கோபப்படமாட்டான் என்பது மட்டும் நிச்சயம். அம்மாதிரி, நூல் உணர்ச்சியே இல்லாத எனது பாடல்களை, முறை பிறழாது கற்றுணர்ந்த பெரியோர் படித்துப் பார்த்துவிட்டுக் கோபிப்பார்களா? இல்லை. கோபிக்க மாட்டார்கள். இப்படித் தைரியப்படுத்திக் கொள்கிறான் கம்பன்.

அந்தப் பாட்டு:

அறையும் ஆடரங் கும்படப், பிள்ளைகள்
தறையில் கீறிடில் தச்சரும் காய்வரோ?
இறையும் ஞானம் இலாதஎன் புன்கவி
முறையில் நூலுணர்ந் தாரும் முனிவரோ?

[ஆடரங்கு - நர்த்தன சாலை; பட - தோன்ற; தச்சர் - சிற்பிகள்; காய்தல் - கோபப்படுதல்; இறையும் - கொஞ்சமும்; புன் - இழிவான; முனிவரோ - கோபிப்பார்களோ.]

அவையடக்கம் கூறுவதென்பது ஒரு மரபு. கம்பன் அவையடக்கம் கூறவேண்டியவனா? இவ்வளவு தூரம் அவன் கூறியதிலிருந்து, இதற்கு அவசியம் இருந்திருக்கிற தென்பது தெரிகிறது. அதாவது அக்காலத்தில் ஏராளமான, சிறந்த கவிஞர்களும், நல்ல ரசிக சிகாமணிகளும் இருந்திருக்கிறார்கள் என்று கூறலாம்.

கம்பனுக்குத் தன் கவியின் தன்மை தெரிந்திருக்கவேண்டும். அதுவும் தவிர, அக்காலத்திலேயே கம்பன் கவியைப் படித்துப் பலர் பாராட்டியிருப்பர். இருந்தும், இவ்வளவு தூரம் அவையடக்கம் கூறியதற்கு மேலே சொன்ன காரணம் தவிர இன்னொரு காரணமும் சொல்லலாம். நூல் எழுதுபவர்கள் எப்படிப்பட்ட உள்ளத்தினராக இருத்தல் வேண்டும் என்பதைக் கூறும் நீதி வாக்கியங்களாகவும் அவன் பாடியிருக்கலாம். ஏனெனில், அவன் நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும் கவிதா சக்தியிலே சீர் தூக்கிப் பார்க்கும் சக்திவானாக விளங்கி யிருக்கிறான்; விளங்குகின்றான். அவன் அமரன்.



2. மழை வெள்ளத்தோடு பெருகும் கலை வெள்ளம்

ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் தண்ணீர்தான் ஜீவநாடி; நாட்டு வளப்பத்துக்குத் தாய். வேண்டும்போதெல்லாம் தண்ணீரைத் தரக்கூடியது ஆறு. எப்பொழுது வெட்டினாலும் பெருக்கெடுக்குமல்லவா? இந்த உண்மையை மனத்தில் வைத்துக் கொண்டுதான் கம்பன் நாட்டைப்பற்றிக் கூறுமுன் ஆற்றைப் பற்றிச் சொல்லலானான் போலும்!

ஆற்றை வர்ணிக்க வேண்டுமென்று நினைத்தான் கம்பன். எந்த ஊரில் ஓடுகிற ஆறு என்பதைச் சொல்லிவிட்டல்லவா பின்னர் ஆற்றின் சிறப்பைக் கூறவேண்டும்? அவ்விதமே கூறுகிறான்: இந்தக் கவிதான் இராமாயணத்தின் முதற் கவி. இதைப் படித்தவுடன், கம்பனின் கற்பனைத் திறனையும், கலையழகையும் கண்டு பிரமித்துப் போகின்றோம். முதிர்ந்த பண்பு, நீதி, நெறி, கலையழகு, கவி நயம், நாதம் ஆகிய எல்லாம் சேர்ந்த கலை வெள்ளம், காட்டு வெள்ளத்தோடு கலந்து பெருக்கெடுக்கிறது. எல்லோரும் பருகட்டும் என்று மடையைத் திறந்துவிட்டு விட்டான், கவியுலகின் சக்ரவர்த்தியாகவும், வள்ளலாகவும் விளங்கிய கம்பன்.

நினைத்த விடத்திற்குச் சென்று தீமையைச் செய்து பாவத்தை மூட்டை கட்டிக்கொள்ளுகிற ஐம்பொறிகளிருக்கின்றன வல்லவா? அவ்வைந் தும் அம்புகள் என்கிருன்.

ஐம்பொறிகளை அடக்கி அனுபவிப்பதுதான் இன்பம் என்பதைக் கம்பன் கூருமற் கூறு கிருன். அவற்றை அடக்கி ஆளாவிட்டால் அந்தப் பாணங்கள் அவனையே திருப்பிக் கொன்றுவிடும் என்பதும் இங்கே நினைவுபடுத்திக்கொள்ள வேண் டியதாகும்.

பெண்களுடைய கண்—அது போர்த்தொழில் கொண்ட அம்பு. அந்த அம்புக்கு இரையாகாம லிருக்க வேண்டுமே! ஐம்பொறி அம்புகளும் கண்ணம்பும், சிறிதுகூடச் சன்மார்க்கத்திற்குப் புறம்பாகச் செல்லாத கோசல நாட்டை அலங்கரிக் கின்ற **சரயூ** நதியின் அழகைக் கூறுகின்றேன் என்று ஆரம்பிக்கிருன்.

ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்,
காச லம்பு முலையவர் கண்எனும்
பூச லம்பும் நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை ஆற்றணி கூறுவாம்.

[ஆசு அலம் புரி - மிகவும் குற்றத்தைச் செய்கின்ற; வாளி - பாணம்; காசு அலம்பு - இரத்தின ஆரங்கள் ஒன் ருேடொன்று ஒலித்தற்கு இடனை; புனை - அலங்கரிக் கின்ற.]

இன்னும் ரசமான சம்பவங்கள் பலவற்றை வர்ணிக்கிருன் :

"வெண்ணிறமான மேகங்கள் கடலை நோக்கிப் போகின்றன. அவைகளுடைய நிறம் திருநீறணிந்த சிவபிரானைப் போலிருக்கிறது. வான வீதியை அலங்கரித்துச் சென்ற மேகங்கள் கடலில் சென்று கண்டமட்டும் மண்டுகின்றன. பின்னர்த் திரும்புகின்றன. இப்பொழுது அந்த மேகங்கள், அகிற் குழம்பை அணிந்த தனங்களையுடைய திருமகளைத் தன் மார்பில் அணியாகக் கொண்டுள்ள மாலின் திருமேனியைப்போலாய் விடுகின்றன." "வெண்மையாகச் சென்று கருமையாகத் திரும்பின" என்பதைக் கம்பன் எவ்வளவு அழகாகக் கூறிவிட்டான்! 'தோற்றத்தைக் கண்டு மயங்காதே' என்பதை நெஞ்சில் ஆழப் பதியவைப்பது மாதிரி கூறியிருக்கிறான். "அரியும் சிவனும் வெவ்வேறு என்று தோற்றத்தைக் கண்டு எண்ணிவிடாதே, எல்லாம் ஒன்றுதான்" என்கிறான்.

திருமாலின் மேனியைப் போல வந்த மேகங்கள் உல்லாசமாக வந்து மலைமீதமர்ந்தன. இப்படி அமர்ந்தது எப்படி இருந்தது தெரியுமா?

ஆறுகள் மலையினிடத்தே உற்பத்தியாகின்றனவாதலால் அவை மலைக்கு மகள் முறை! எங்கெங்கோ ஓடியாடிப் பின் கடலில் கலக்கின்றன, பருவமாகிவிட்ட பெண் கணவன் வீட்டுக்குச் செல்வது போல. கடல் ஆற்றைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்ட முறையில் மலை மாமனாராகிவிட்டது! மாமனாருக்கு, சூரியனால் ஏற்பட்டுள்ள உஷ்ணத்தைத் தணிப்பதற்காகக் கடல் மேக ரூபத்தில் வந்து படிகிறது. மாமனார்மீது அவ்வளவு வாஞ்சை!

கண்ணைப் போன்ற பெண்ணைக் கொடுத்தவ ரல்லவா? எவ்வளவு ரசமாக இருக்கிறது! இப் பொழுது மழை பொழிகிறது. மழை வள்ளலைப் போலப் பெய்கிறது. பொன்னிறமான இமயமலை மீது வெண்ணிறமுள்ள தாரைகள் பொழிவதானது அதைத் தோண்டி எடுக்கும் கருவிபோலிருந்ததாம். பொன்னைத் தோண்டியெடுக்க இரும்பையா உப யோகிப்பது? பொன்னைத் தோண்டி யெடுக்க அதன் தகுதிக்கேற்ப வெள்ளி மயமான தோண்டு கருவி வீழ்கிறது! வள்ளல்கள் தூய்மை யுள்ளம் படைத்தவர்கள். தங்களிடமுள்ள எல்லாவற்றை யும் வழங்கிவிட்டுத் தங்களையே வழங்கிவிடும் தன்மையினர். வள்ளல்களின் தூய்மையுள்ளம் போலிருக்கின்றன மழையின் வெண் தாரைகள். மழை தன்னையே உதிர்த்து விடுவதுபோல வள்ளல் கள் தங்களைத் தியாகம் செய்கின்றார்களல்லவா?

இந்த அற்புதமான கருத்துக்களையும், இன் னும் ஆராய ஆராயத் தோன்றும் எண்ணிறந்த கருத்துக்களையும் உள்ளடக்கிய மூன்று கவிகளையும் பாருங்கள்:

நீற ணிந்த கடவுள் நிறத்தவான்
ஆற ணிந்து சென் (று) ஆர்கலி மேய்ந்(து)அகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டதே.

[ஆர்கலி மேய்ந்து-கடலின் நீரைப்பருகி.]

பம்பி மேகம் பரந்தது, 'பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்
அம்பின் ஆட்டுதும்' என்(று)அகல் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே!

[பம்பி - எழுந்து ; பரந்தது -(மலையிற்)படிந்த தன்மை ; பானு - சூரியன்; நம்பன் - சிறந்தவன்; மாதுலன் - மாமன்; அம்பின் - நீரினால் ; ஆட்டுதும் - நீராட்டுவோம் ; இம்பர் - இவ்வுலகம் ; வாரி - கடல்.]

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி யுள்ளவெ லாம்உவந்(து) ஈயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே.

[புள்ளிமால்வரை - பெருமையுடைய இமயமலை ; வீழ்-தோண்டும் கருவி; உள்ளி - (செல்வம் நிலையாதது என்பதையும், ஈகைதான் நற்கதி தருவது என்பதையும்) எண்ணி ; வள்ளியோரின்-வண்மைக் குணமுடையவர்களைப் போல.]

இப்படியாகப் பொழிந்த மழை வெள்ளமாகப் பெருக்கெடுக்கிறது, அறத்தைக் கண்ணும் கருத்து மாகப் பார்த்து நீதி நெறி தவறாது ஆட்சிசெய்யும் அரசனது புகழைப் போல.

ஒரு இனிய பூங்காவின் இடையே அமைக்கப் பட்ட மேடையிலே ஏகாந்தமாக அமர்ந்திருக் கிறான் கம்பன். வெள்ளம் பெருக்கெடுப்பதை அப் படியே மனக்கண்ணால் பார்க்கிறான். சிந்தனை அலைகள் பொங்க ஆரம்பிக்கின்றன.

வெள்ளம் மலையுச்சியில் புறப்பட்டு, நடுவிடத் தைக் கடந்து அடியை யடைந்து ஓட்டமெடுக்கிறது. தான் உருண்டு ஓடிவருவதோடு மலையிலுண்டாகும் பொருள்களையும் உருட்டிக் கொண்டு போகிறது. இந்த வெள்ளம் உற்பத்தியான இடத்தில் சிறிது நேரம் கூடத் தங்காமல் இப்படி ஓடி விடுகிறதே ; இதைப்பற்றி யோசித்தான் கம்பன். இந்த வெள்

ளத்தின் செய்கை விலைமாதரை ஒத்திருந்ததைக் கண்டான். விலைமாதர் தம்மிடம் வந்த காமுகரை உச்சிமுகர்ந்து, மார்புடன் அணைத்து, பாதத்தைத் தழுவி, இருப்பதைப் பறித்துக் கொண்டு அப்பால் சென்று விடுவரல்லவா ?

விலைமாதராகச் சிறிது தூரம் ஓடிய வெள்ளமானது, இப்பொழுது கைதேர்ந்த பெரிய வியாபாரியாகத் தோன்றுகிறது கம்பனுக்கு. வெள்ளப் பெருக்கானது இரத்தினம், பொன், மயிலிறகு, தந்தம், சந்தனக் கட்டைகள் முதலிய இப்படிப்பட்ட பொருள்களை யெல்லாம் தன்னுடன் கொண்டு போகிறது, வணிகனைப் போல.

அந்த வெள்ளத்தில் பலநிறப் பூக்கள் மிதக்கின்றன. மகரந்தங்கள் தூவி விடப்பட்டது போன்று கிடக்கின்றன. எத்தனையோ தேன் கூட்டையும் அடித்துச் செல்கிறது வெள்ளம். புஷ்பங்களில் உண்டான தேனும் நீரோடு கலந்து விடுகிறது. பசும் பொன்னையும் உருட்டிக் கொண்டு போகிறது. பலவிதமான வர்ணங்களைப் பெற்று வெள்ளம் வளைந்து போவதனாலே அது வானவில்லைப் போலிருக்கிறது கம்பனுக்கு.

வெள்ளப் பெருக்கு எப்படி யெல்லாம் உருவெடுத்துப் போகிறது பாருங்கள் ! இன்னும், கடைசியாக வரப்போகிற காட்சியைக்கூட கம்பன் காண்கின்றான் முதலிலேயே. வெள்ளப் பெருக்கு ஒரு குன்றினிடையே புகுகிறது. அந்தக் குன்றை வேரோடு பெயர்த்துக் கொள்ளுகிறது. பக்கத்தி

விருந்த மரம் செடி கொடிகளையும் வாரிச் சுருட்டிக் கொள்ளுகிறது. இந்தக் காட்சி—அன்று, கடலில் அணைபோட வானர சைன்யங்கள் மலைகளையும் மரங்களையும் பிடுங்கி வந்ததை ஒத்திருக்கிறதாம்.

பிறகு, அந்த வெள்ளம் ஒரு பெரிய காட்டுக்குள் நுழைந்தது. தன்னுடைய பலவகைப் படைகளையும் ஒழுங்குபடுத்திக் கொண்டு சமுத்திரத்தின் மீது சண்டைக்குப் போவதைப் போல, அங்கே மேய்ந்து கொண்டிருந்த யானை முதலிய பலவகை மிருகங்களை அடித்துக்கொண்டு பேரிரைச்சலுடன் புறப்படுகிறது வெள்ளம்.

எப்படியிருக்கிறது கவியின் கற்பனை ஆறு? ஆற்று வெள்ளத்தோடு நமது உள்ளமும் இழுக்கப் படுகிறது. அதிலே கலை அழகு சொட்டுகிறது.

பெரும் வெள்ளத்திலிருந்து ஒரு நதி பிரிகிறது. அந்த நதி எங்கே செல்லுகிறது, எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள் :

இரவி தன்குலத்(து) எண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
'சரயு என்பது, தாய்முலை அன்ன(து)' இவ்
உரவு நீர்நிலத்(து) ஓங்கும் உயிர்க்கெலாம்.

[இரவி - சூரியன் ; பரவு - புகழ்தற்குரிய ; பூண்டது - மேற்கொண்டதாகிய ; உரவு நீர் - உலாவும் தன்மையுள்ள கடல்.]

சூரிய குலத்தில் பிறந்த எத்தனையோ அரசர்கள் பரம்பரையாகக் கோசல நாட்டை நெறி பிறழாது ஆண்டு வருகின்றார்கள். இவர்கள் நல்லொ

ழுக்கத்தின் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள். இவர்களது ஒழுக்கத்திற்கு நதியை ஒப்பிடுகிறான் கம்பன். இப்படிப்பட்ட நல்லவர்களின் நாட்டை வளஞ்செய்யும் பாக்கியத்தைப் பெற்றது சரயூ நதி. உலகத்தை உண்டாக்கிக் காத்து ரட்சிக்கும் 'உலகோம்பும்' தாய்களுக்கு உதாரணமாகச் சொல்லுகிறான் நதியை. 'சரயு என்பது தாய்முலை அன்னது.' இதைவிட அழகாகவா நதியின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் கூற முடியும்?

வாசனை நிரம்பிய நதியானது இடைச்சியர் இல்லத்தில் புகுந்து, பால், தயிர், வெண்ணெய் இவைகளை உரியுடன் உருட்டிக் கொண்டும், ஆச்சியரின் ஆடைகளைக் கவர்ந்து கொண்டும் போவதால், பாலகிருஷ்ணனின் லீலையை நினைவுபடுத்துகிறது என்பதை அடுத்த கவியில் கூறுகிறான். அதற்குமேல் வெள்ளமானது, முல்லை நிலத்தைக் குறிஞ்சி நிலமாக்கியும், மருதநிலத்தை முல்லை நிலமாக்கியும், நெய்தல் நிலத்தை மருத நிலமாக்கியும் செல்கிறது, வினை தன் கதியில் ஓடுவதைப் போல.

கம்பன் தனது சமயக் கொள்கையை ஆற்றுப் படலத்தின் கடைசி இரண்டு பாட்டுக்களில் இவ்விதமாகத் தெளிவாகக் கூறியிருக்கிறான் :

எங்கெங்கோ உள்ள மலைகளில் ஆறுகள் உண்டாகின்றன. அவைகளுக்குப் பல திறப்பட்ட பெயர்கள். அவை பல இடங்களில் சுற்றுகின்றன. பின்னர்க் கடலிலே கலக்கின்றன. எத்தனையோ பெயரால் வழங்கிய ஆற்றுத் தண்ணீர் ஒரே ஒரு

பெயரால் 'கடல்' என்றே ஆகிவிட்டது. இதைப் போலக் கடவுள் ஒருவரே. ஆனால் சமயங்கள் பல வாய் வழங்குகின்றன. கடவுள்கள் பலர் உண்டாக் கப்பட் டிருக்கின்றனர்! எத்தனையோ தினுசான பெயர்கள்! பல முறைகளில் அமைக்கப்பட்ட கோயில்கள்! அதனுள் பலதிறப்பட்ட சின்னங் கள்! மதக் கோட்பாடுகள் பலவாகிக் கிடக்கின் றன. 'உங்கள் தெய்வம்' 'எங்கள் தெய்வம்' என்று கூடச் சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் எல்லாம் ஏகம்தான்; சரயு நதியைப் போல. ஆதியும் ஒன்று தான், அந்தமும் ஒன்றுதான். ஒரு பெரிய விஷ யத்தை ஆற்று வெள்ளத்தைக் கொண்டு நமக்கு விளக்கி விட்டான்கம்பன்.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்,
எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருள்ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த(து)
அன்றே.

[கல் - மலை; நீத்தம் - வெள்ளம்; மறைகள் - வேதங் கள்; இயம்பரும் - சொல்லுதற்கு அருமையான; தொல்லை- ஆதி.]

அடுத்த கவியைப் பாருங்கள்:—

தாதுகு சோலை தோறும், சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும், புதுமணத் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்;
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.

[தாது - மகரந்தப் பொடி; உகு - சிந்துகின்ற; போது- அரும்பு; அவிழ் - மலர்தல்; தடங்கள் - தடாகங்கள்; மாதவி - குருக்கத்திக் கொடி; பூகம்-கமுகு.]

ஆற்றுப் படலத்தில் கடைசியாக உள்ள மூன்று பாட்டுக்களில் முதலாவது பாட்டின் கடைசி அடியில் கருத்துக்களைத் திணித்து வைத்திருக்கிறான் கம்பன். அதையும் இந்தக் கவியுடன் சேர்த்துப் பார்த்தோமானால் இன்பம் இன்னும் அதிகப்படும்.

கோத்த கால் ஒன்றினொன்று சூல மெனப் பிரிந்த தன்றே.

என்பதுதான் அந்த அடி. "ஆறு பூமி கிழியுமாறு வெகு தூரம் சென்று பல வாய்க்கால்களாகப் பிரிந்து விட்டது, சூலம் பிரிந்திருப்பதைப் போல" என்பது அதன் பொருள். ஒரே வரியில் உள்ளக் கருத்தைக் கூறும் கம்பனின் ஆற்றலுக்கு இது ஒன்றே உதாரணம்.

உடல்தான் அழிகிறது. உயிர் அழிவதன்று. உயிர் ஒன்று தான். ஒரே உயிர்தான் உலகம் முழுமையும் எல்லாப் பொருள்களிலும் ஓடிக் கொண்டிருக்கிறது; உலாவிக் கொண்டிருக்கிறது. எப்படி? ஆறானது மகரந்தங்கள் சிந்துகின்ற சோலைகளிலே புகுந்து, காடுபோல மிகுந்திருக்கிற சண்பகச் சோலையிலே பாய்ந்து, அரும்பு மலரப்பெற்ற பொய்கைகளில் விரைந்து, கமுகுத் தோட்டங்களிலும், வயல்களிலும் ஊடுருவி உலாவிக் கொண்டு ஓடுகிறதே அந்த மாதிரி. நம்மை இயற்கையோடு ஒன்றிப் பார்க்கும்படி கூப்பிடுகிறான் கவி.

பேதங்களைக் கடந்து நிற்பவன் இறைவன். இந்த உண்மையை உணர்ந்தால் இங்கும் பேதம் நீங்கி அன்பு பிரகாசிக்கும், மெருகு கொடுத்து நிறைய எண்ணெய் கொட்டித் திரி தூண்டப்பட்ட

விளக்கைப் போல. உயிர்த் தத்துவத்தின் உண்மையை உணர்ந்தால்தான் மக்கள் ஒன்று சேர்ந்து உய்ய வழி தோன்றும். தர்மத்தை உணர்ந்தவன் கம்பன். தர்மத்தை எவ்வளவு அழகாகச் சொல்லலாம் என்பதைக் காட்டிவிட்டான். இன்னும் சொல்கிறான். அது அவனால்தான் முடியும். அவன் கவிப் பிரமன்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1752
நன்கொடை எண்: 1752

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

3. அமரன் சிருஷ்டித்த அற்புத நாடு

பூங்காவினுள் ஏகாந்தமாக அமர்ந்திருக்கும் கம்பனைக் காணச் செல்கிறோம். கனிவு நிறைந்த இன் சொல்லால் வரவேற்கப்படுகிறோம். கவிஞன் காம்பீர்யமாக எழுந்து நடக்கிறான். ஆனந்தம் அவன் முகத்திலே பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. நமக்கும் ஏதோ ஒரு உன்னதமான உணர்ச்சி; காணாத ஒன்றை, அற்புதத்தின் சிகரத்தை, நாம் காணப் போகிறோம் என்ற நம்பிக்கை இதயத்தைத் தொட்டுத் தொட்டு இழுத்துச் செல்கிறது.

உல்லாசமான வழிநடை. காலை வேளை. ஒரு வரப்பின் மீது காலை வைத்ததும் உடல் குலுங்கியது. புத்துணர்ச்சி பொங்கியது. அமுதத்தைப் பருகினாற் போன்ற ஆனந்தம். மெய்சிலிர்ப்புடன் முன்னே போகும் கவிஞனை உற்று நோக்குகிறோம். கவிஞன் திரும்பிப் பார்த்துப் புன்முறுவலோடு "இதுதான் கோசல நாட்டின் எல்லைப்புறம்" என்கிறான்.

என்றுமில்லாதவாறு நமக்கு உண்டான உன்னத உணர்ச்சிக்குக் காரணம் இப்பொழுது தெரிந்து விட்டது.

நமது கண்களைச் சுழற்றி நாலாபுறமும் காண்கிறோம். என்ன அற்புதம்! வயல்களின் வரப்புக்களிலெல்லாம் முத்துக்கள். தண்ணீர் தாவிப்பாயுந் தன்மையுள்ள மதகுகளிலெல்லாம் சங்குகள். வாய்க்

கால்களின் செய் கரைகளிலெல்லாம் பொற்கட்டிகள். எருமைகள் வீழ்ந்து புரளும் குழிகளிலெல்லாம் மலர்க் குவியல். பரம்படித்துச் சமமாக்கிய இடங்களிலெல்லாம் பவழங்கள். செந்நெற் பயிரினிடையே அன்னப் பறவைகள். கரும்புகளிலெல்லாம் செந்தேன்.

வரம்பெலா(ம்) முத்தம், தத்து
மடையெலாம் பணில(ம்), மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன், மேதிக்
குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளம் சாலிப்
பரப்பெலாம் அன்னம், பாங்கர்க்
கரும்பெலாஞ் செந்தேன், சந்தக்
காவெலாம் களிவண் டீட்டம்.

[தத்து-தாவிப் பாய்தல்; மடை-மதகு; பணிலம்-சங்கு; குரம்பு-(நீர்ப்) பெருக்கு; மேதி-எருமை; கழுநீர்க் கொள்ளை - மலர்க் குவியல்; பரம்பு-பரம்படித்துச் சமப்படுத்திய நிலம்; சாலி-நெல்; பாங்கர்-பக்கம்; கா-சோலை.]

வயலைத் தாண்டியவுடன் ஒரு சோலை. அந்தச் சோலை நடனசாலையாகக் காட்சியளிக்கிறது. மருதம் உருவெடுத்து மத்தியிலே வீற்றிருக்கிறது. மயில்கள் நாட்டியப் பெண்களைப் போல நடனம் புரிகின்றன. தாமரைக் கொடிகள் மாதர்களைப் போல ஜோதி மயமான விளக்குகளைத் தங்கள் கரங்களில் ஏந்தி நிற்கின்றன. மேகங்கள் நடனத்திற்கேற்ப முழங்குகின்றன, மத்தளத்தைப் போல. ஒரு காட்சி முடிந்ததும் திரையிட்டு அடுத்த காட்சி ஆரம்பிக்கும் பொழுது திரை விலக்கும் பணியை அலைகள் ஏற்றுக்கொண்டன போலும்! அவை மடிந்து சுருண்டு

எழுந்து வருவதும், பின் உள் வாங்குவதும், இதைத் தான் நினைவூட்டுகின்றன. வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன, மகர யாழைப் போன்று. அந்த ஓசை தேனைப் பிழிந்து கொடுப்பது போன்றிருக்கிறது. இந்த நடனத்தைக் குவளை மலர்களாகிய மகா ஜனங்கள் கண் விழித்து நோக்குகின்றனர். ஆஹா! என்ன ஆனந்தமான காட்சி!

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ!

[தண்டலை-சோலை; விளக்கம்-விளக்கு; கொண்டல்கள்-மேகங்கள்; முழவு-மத்தளம்; ஏங்க-ஒலிக்க; தெண்டிரை-தெளிந்த நீர் நிலையில் தோன்றுகின்ற அலை; எழினி-திரைச்சீலை; தேம்பிழி-இனிய தேன்; மருதம்-வயலும் வயல் சார்ந்த இடமும், மருத நிலப்பண்.]

கம்பனது நாடகப் பண்பு எப்படி இருக்கிறது பாருங்கள்! அற்புதமான நடனசாலையை அமைத்து விட்டான்.

அந்த நாட்டின் நிலவளத்தைத்தான் பாருங்களேன். அதற்கு எடுத்துக்காட்டாகச் செந்தாமரைகள் மலர்ந்து தலை தூக்கிப் புன்முறுவல் பூக்கின்றன. ஆனந்தமாக ஆடி அசைந்து நம்மை அன்புடன் வரவேற்கின்றன. மலரின் மத்தியில் உல்லாசமாக வீற்றிருக்கிறாள் திருமகள். வணக்கம் செலுத்தும் வைணிகர்களைப் போல வண்டுகள் தாமரையைச் சுற்றி ரீங்காரம் செய்கின்றன. ஒருநாளும் தீ நெறியில் செல்லாதவன் அரசன். அப்படியே

குடிகளும். அறத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கும் அந்நாட்டிலே பருவத்தே பெய்கிறது மழை. மழை, முத்தையும் பவழத்தையும் கூட உதிர்க்கிறது. கடலிலே கொழிக்கின்றன மணிகள். அந்த வளநாட்டின் வண்மை எப்படிப்பட்டது!

ஆ! என்ன இனிமை! உள்ளத்தை உருக்கும் இசை! அமுதம் இசை உருவத்தில் புறப்பட்டு வருகிறதோ? அதோ, பாணர்கள் யாழ் வாசிக்கிறார்கள். அவர்கள் இனிய இசைத்தேன் பருகி இருக்கிறார்கள். அந்த மெய்ம்மறந்த ஆனந்த வெள்ளத்திலிருந்து அமுத நாதத்தை அள்ளி இறைக்கிறார்கள். அதிகாலை வேளையில் அசைந்துவரும் தென்றலுடன் கலந்து வருகிறது மெல்லிய இனிய இசைத்தேன். திருப்பள்ளி யெழுச்சியா? ஆமாம், ஆமாம்!

வெள்ளியை உருக்கி வார்த்துக் கட்டப்பட்டது போன்று வெயிலைப் பழிக்கும் வெண் மாடங்களின் மேற்கூடம். பசும்பொன் கட்டில். அதில் படுத்து உறங்குகிறாள் மங்கை. அரிய பெரிய கரிய கண்கள். மயில் போன்ற சாயல். நாதவெள்ளத்தைப் பருகிக் கொண்டு துயிலெழுகிறாள் அம்மடந்தை. இந்த ஒரு மாளிகையில் மட்டுந்தான் இப்படியா? வீதிகள் தோறும், வீடுகள் தோறும் இப்படித்தான். அரசர்கள், துயிலப்போம் பொழுதும் துயிலெழும் பொழுதும் இன்னிசையைக் கேட்பார்கள். விழித்ததும் அவர்கள் கண்களுக்கு நல்ல பொருள்கள்தாம் தென்படும். இங்கே பேதமில்லை. அரசனுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் இந்த முறைதான். தற்செய

லாகக் கூட இவர்கள் காணத்தகாத காட்சியையோ, கேட்கத் தகாத ஒலியையோ கேட்டுவிட முடியாது, அங்கே அவை இல்லாததனல்தான். என்ன ஆனந்தமான வாழ்க்கை! இந்த அமர பீடத்திற்கு நம்மை அழைத்து வந்த கம்பனுக்கு நன்றி கலந்த வணக்கம் செலுத்தும் தோரணையில் பார்க்கின்றோம். கவிஞன் காம்பீர்யமான புன்முறுவலுடன் நம் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொள்கிறான்.

இதோ அழகுத் தெய்வங்கள் எவ்வாறு துயிலெழுகின்றன வென்பதைப் பாருங்கள் :—

தெள்விளிச் சிறுயாழ்ப் பாணர்
தேம்பிழி நறவம் மாந்தி
வள்விசிக் கருவி பம்ப
வயின்வயின் வழங்கு பாடல்,
வெள்ளிவெண் மாடத்(து) உம்பர்
வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளரும் கருங்கண் தோகை
இன்துயில் எழுப்பு மன்றே.

[தெள்விளி - தெளிவான இசை; நறவம் - கள்; மாந்தி - குடித்து; வள்விசிக்கருவி - வாரினல் கட்டிய மத்தளம்; பம்ப - ஒலிக்க; வயின் வயின் - அந்த அந்த இடங்களில்; மாடத்து உம்பர் - மாளிகையின் மேலிடம்; எள்ளருங் கருங்கண் - பழித்தற்கு அரிய கரிய கண்கள்.]

தேன், எங்கும் தேன், இன்பத் தேன், வகை வகையான தேன்.

ஆலைவாய்க் கரும்பின் தேனும், அரிதலைப் பாளைத் தேனும்,
சோலைவாய்க் கனியின் தேனும், தொடைஇழி இறவின் தேனும்,
மாலைவாய் உகுத்த தேனும், வரம்பிகந்து ஓடி வங்க
வேலைவாய் மடுப்ப, உண்டு மீன்எலாங் களிக்கு மாதோ.

[மாலை - பூமாலை; இகந்து - கடந்து; வங்கம் - அலை; வேலை - கடல்; மடுப்ப - கலக்க.]

கரும்பிலிருந்து கனியும் செந்தேன், தென்னம் பாளையிலிருந்து விழும் தேன், சோலைகளில் பழுத்துக் கனிந்துவிழும் கனிகளில் கசியும் தேன், தேன் கூட்டிலிருந்தே விழும் கொம்புத் தேன், எல்லா வகையான தேனும் ஒன்று சேருகிறது. ஆஹா! என்ன இன்பம்! அப்படியே பெருக்கெடுக்கிறது. வெள்ளமாகக் கடலில் கலக்கிறது. மீன்கள்தாம் செய்த பாக்கிய மென்ன! இன்னும் ஆச்சர்யம்! கடல் நீரில் ஒரு கை அள்ளிப் பருகுகிறோம். கடல் நீர் உவர்ப்பாயில்லை. தேனுக இனிக்கிறது. தொட்டகை மணக்கிறது, தேனாற்றுப் பாய்ச்சலினால். அந் நாட்டு மக்களின் கொடை எவ்வளவு தூரம் சென்று பாய்கிறதென்பதைப் பாருங்கள். கடல்தான் எவ்வளவு புண்ணியம் செய்தது. தேன் பாயும் கடலாக விளங்குவதோடு நறு மணம் கமழும் கடலாகவும் மிளிர்கிறது. கஸ்தூரி குழம்பு பூசி சீவி விடப்பட்ட கூந்தலில் மணம் நிரம்பிய மலர் சூட்டிக் கொள்ளுகிறார்கள் மகளிர். ஆற்றில் நீராடும் பொழுது மணம் இறங்கிப் பெருக்கெடுத்துக் கடலில் கலக்கிறது. அங்குள்ள ஆடவர்கள் பச்சைக் கருப்பூரம், குங்குமப் பூ முதலிய உயரிய வஸ்துக்கள் சேர்த்துச் செய்யப் பட்ட செஞ் சந்தனக் குழம்பைப் பூசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நீராடும்பொழுது சந்தனக் குழம்பு ஆற்றில் கலந்து பெருக்கெடுத்து நிலங்களில் பாய்கிறது. இந்த அருமையான வஸ்து நிலத்திலே வண்டலாகப் படிகிறது. இப்படிப்பட்ட உரம்

போட்டு வளர்க்கப்படும் நெற்பயிர் எப்படிப்பட்ட ஈட்டமுடையதா யிருக்குமென்று சொல்லவா வேண்டும்?

அமோகமாக வளர்ந்து செழித்து நிற்கும் செந் நெற் பயிரிடையே ஒரு அழகான காட்சி. பெண் அன்னம் தன் குஞ்சுகளைத் தாமரை மலரில் படுக்க வைத்து விட்டு அப்படி உல்லாசமாக நடந்து போகி றது அழகிய மாதரைப் போல. குஞ்சுகளை விட்டுப் பிரிவதைப்பற்றிச் சிறிதும் யோசிக்கவில்லை என்று தெரிகிறது, அதன் நடை அழகிலிருந்து. தன் குஞ்சு களுக்கு எப்படிப்பட்ட உபசாரம் நடக்கிறதென் பதை அது சிறிது தூரத்திலிருந்தே காண்கிறது.

மேய்ச்சலுக்காக ஊரைவிட்டு வயலுக்கு வந் திருக்கின்றன எருமைகள். கன்றுகளை நினைத்துக் கொள்கின்றன. பால் சுரந்து பெருக்கெடுக்கிறது. தாயன்புக்கு எல்லையாக விளங்குகிறது இந்தக் காட்சி. அந்தப் பாலை அன்னக் குஞ்சுகள் பருகு கின்றன. பச்சை நிறமுள்ள தவளைகள் பாடுகின் றன. உணவுக்குப் பின் சங்கீதம். என்ன நேர்த்தி! இசையமுதம் தாலாட்டாக மாறுகிறது. அதைக் கேட்டுக்கொண்டே ஆனந்தமாகத் தூங்குகின்றன அன்னக் குஞ்சுகள். என்ன இயற்கை! அதில் எவ்வளவு ஆழ்ந்த தத்துவம்!

சேலுண்ட ஒண்க ணாரில் திரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்(று) உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை.

[சேல் உண்ட - சேல் என்னும் மீனை ஒத்த: ஒண்கணாரில் - ஒளி நிரம்பிய கண்களையுடைய மகளிர் போல்; மாலுண்ட - பெருமை பொருந்திய; நளினப் பள்ளி - தாமரை மலர்ப் படுக்கை; காலுண்ட - காலிற்பட்ட; மேதி - எருமை; கன்று உள்ளி - கன்றை நினைத்து; சோர்ந்த - தானே பெருகிய.]

செந் நெற்பயிர் பாலினுல் தழைத்து வளர்க்கப் படுகிறது!

சோலையில் ஒரு இன்பக் காட்சி. ஒரு பக்கம் குயிலினங்களின் மண விழா. மற்றொருபுறம் மகளிர் நடனத்தைச் சோபிக்கச் செய்யும் மயிலினங்கள் தோகை விரித்தாடும் காட்சி. தாமரையைச் சுற்றி வண்டுகளின் ரீங்கார ஒலி, வீணை கானத்தின் லயத்தைப்போல. இந்த மனோகர வேளையிலே தாமரை மலரிலிருந்து அரச அன்னம் துயிலெழுகிறது, மலைமகளைப் போல.

குயிலினம் வதுவை செய்யக்
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை,
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்(கு) அழகு செய்யப்
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

[வதுவை - மணம்; குனிக்கும் - ஆடும் தன்மையுள்ள; மஞ்ஞை - மயில்; அயில்விழி - வேல்போன்ற கண்கள்; பயில்சிறை - நெருங்கிய சிறகையுடைய; பன்மலர்ப்பள்ளி - தாமரை மலர்களாகிய படுக்கை; செவ்வழி - காலையில் பாடும் பாட்டு. முரல்வ - பாடுவன.]

அந்த நாட்டு மக்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதைப் பார்ப்போம் :

இளைஞர்கட்கும் பருவ மங்கையர்க்கும் ஒரு புறத்தில் திருமண விழாக்கள். இவர்கள், பருவம், வடிவம், குணம், செல்வம் எல்லாம் பொருந்திய மண மக்கள். சரச சல்லாபத்தில் காலங் கழிக்கும் காதலர் ஒரு புறம். மற்றொரு புறத்தில் இசையமுது. பருந்தோடு அதன் நிழல் தொடர்ந்து செல்லுதல் போல இயலையொத்துச் செல்லுகின்ற இசையின் இன்பத்தைப் பருகுகிறார்கள் பலர். பிறிதொருபுறத்தில் அமுதினும் இனிய நூற் கேள்விகளை, நல்ல கவிகளை, செவியாகிய வாயினால் பருகிக்கொண்டிருக்கிறார்கள் பலர். இன்னும் பலர் விருந்தினர்களை வரவேற்று அமுது படைத்து அகமகிழ்கிறார்கள். ஆஹா! கொடுத்துக்கொடுத்து இன்பம் அடைகிறார்கள் இவர்கள்.

பொருந்திய மகளி ரோடு
வதுவையிற் பொருந்து வாரும்,
பருந்தொடு நிழல்சென்று என்ன
இயலிசைப் பயன்துய்ப் பாரும்,
மருந்தினும் இனிய கேள்வி
செவியுற மாந்து வாரும்,
விருந்தினர் முகங்கண் (டு)அன்ன
விழாவணி விரும்பு வாரும்.

[பொருந்திய - பத்துவகைப் பொருத்தங்களும் சரியாக அமைந்துள்ள ; வதுவை - மணம் ; மருந்து - தேவாமிர்தம் ; மாந்துவாரும் - உட்கொள்ளுவாரும்.]

இன்னும் பலவகையான விளையாட்டுக்களிலே உல்லாசமாகப் பொழுது போக்குகின்றனர் மக்கள்.

விளைவு ஏராளம். உற்பத்தியும் மிகுதி. அருமையான பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் அயல் நாடுகளுக்குச் செல்கின்றன. பாவச் சுமையைத் தூக்கியறியாத பூதேவியைப் போல அங்கே சாமான்களை இறக்கிவிட்டு முதுகு ஆற்றிக்கொள்கின்றன. பூதேவி பாபாத்மாக்களைச் சுமக்கவேண்டுவதே யில்லை. அரசன் நீதி அறிந்தவன்; குடிகளிடம் கொள்ளையடிக்கும் மனப்பான்மை இல்லாதவன்; இரக்கமே உருக்கொண்டவன்; முறையறிந்து கோபம் கொள்பவன்; மன்னனைப் போலவே மக்களும். இங்கே பாபமேது?

முறைஅறிந்து அவாவை நீக்கி,
முனிவுழி முனிந்து வெஃகும்,
இறைஅறிந்து உயிர்க்கு நல்கும்
இசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந்து உயிர்க்கும் தெய்வப்
பூதலந் தன்னிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க
நெடுமுது(கு) ஆற்று நெய்தல்.

[முறை - நீதி; முனிவுழிமுனிந்து - சினங்கொள்ள வேண்டிய விடத்துச் சினங்கொண்டு; வெஃகும் இறை அறிந்து - விரும்பத்தக்க கடமைகளை அறிந்து பெற்று; இசை கெழு வேந்தன் - புகழ்விளங்குகின்ற அரசன்; பொறை - பாவம்; வங்கம் - கப்பல்கள்.]

அழகுத் தெய்வமும், அன்புத் தெய்வமும், அறிவுத் தெய்வமும், கலைத் தெய்வமுமான பெண்ணுக்குத்தான் கம்பன் எவ்வளவு உயர்வு கொடுத்

திருக்கிறான்! அவர்களுடைய வடிவங்களைத்தான் எப்படி யெப்படி யெல்லாம் வர்ணித்திருக்கிறான்!

பருவ மங்கையர். தாமரையைப்போன்று ஒளி பொருந்திய முகம். அழகிய கண்கள். மை தீட்டப் பட்ட கண்கள்! இவைகளைப் பார்த்தன வண்டுகள். பெண்களின் கண்கள் பெண் வண்டுகளாகத் தோன்றி விட்டன ஆண் வண்டுகளுக்கு! சரச சல்லாபத்திற்குத் தயாராகிப் பறந்து வருகின்றன வாம்!

சோலையிலே உலாவுவதற்காகப் போயினர் பருவ மங்கையர் சிலர். இவர்களின் நடை யழகைக் கூர்ந்து கவனித்தன சில ஆண் மயில்கள். அந்தப் பெண் மயில்களைப் பின் பற்றிப் புறப்பட்டன ஆண் மயில்கள், காளைப்பருவமுள்ள ஆடவரின் மனத்தைப் போல. அந்தப் பெருமை மிக்க நடை, மயில்களுக்குத்தான் உண்டு என்று நினைத்தன போலும்! அந்தக்கவி :

இடங்கொள் சாயல்கண்(டு) இளைஞர் சிந்தைபோல்
தடங்கொள் சோலைவாய் மலர்பெய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடுந்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞைகள்.

[இடங்கொள் - பெருமை பொருந்திய; தடங்கொள் சோலைவாய் - பரப்பைக் கொண்டுள்ள சோலையிலே; குழல் - கூந்தல்; வடங்கொள் - கச்சை யணிந்த.]

கோசல நாட்டின் குப்பை மேடு கூட அந்த நாட்டின் வளப்பத்தையும், செழிப்பையும் எடுத்துக்

காட்டுகிறது. கோழிகள் குப்பை மேடுகளைச் சீய்க்கின்றன. மறைந்து கிடக்கும் இரத்தினங்கள் வெளிப்படுகின்றன. இம்மணிகள் மட்டமானவையென்று வீசி யெறியப்பட்டவை யல்ல. மிகமிக உயர்ந்தவை. பிரகாசம் பொருந்தியவை. ஒளியைக் கண்டு மின் மினிப் பூச்சியென நினைத்துக் கூட்டிற்குக் கொண்டு போகின்றன குருவிகள்! எவ்வளவு ஒளி!

இதோ ஒரு புகைப்படம்; அறைக்குள் நடக்கும் காட்சி:

இடைச்சியர் தயிர் கடைகிறார்கள். தயிர் பாறைபோல் நன்றாய்த் தோய்ந்துள்ளது. கயிற்றை இழுத்து இழுத்து விடும் பொழுது மத்தொலி விட்டுவிட்டு ஒலிக்கிறது. அந் நங்கையர் கைகளில் அணிந்துள்ள சங்கு வளையல்கள் ஒன்றோடொன்று உராய்ந்து ஒலிக்கின்றன, வாய்விட்டுக் கதறுவதைப் போல. மெல்லிய இடை முன்னே போய்ப் போய் வளைகிறது, தள்ளாடி வணங்கும் பூங்கொடியைப் போல. மலரினும் மிருதுவான அழகிய கரங்கள் சிவப்பேறி விட்டன.

தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட்(டு) அரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார்.

[தோயும் - தோய்ந்துள்ள; துள்ளவும் - விட்டுவிட்டு மிகுந்து ஒலிக்கவும்; மாய வெள்வளை - விசித்திர வேலைப்பாடுடன் கூடிய வெண்மையான வளையல்கள்.]

சாமான்ய விஷயங்களிலும் ஒரு உயர்வைப் பார்க்கிறான். சாதாரண சம்பவத்திலும் அசாதாரணக் காட்சியைக் காண்கிறான். சம்பவங்களைக் கவிதா சக்தியிலே நெகிழவிட்டு அதை உருவகப் படுத்தி மெருகேற்றுகிறான். அவன் கவிஞன். பசும் பாலைப் பற்றி ஒருவர் பேசும் பொழுது விஷயங்களை உணருகிறோம். அதே பசும் பாலைப் பற்றிக் கவிஞன் **பேசும்பொழுது** நன்றாகக் காய்ச்சிய பாலின் ஆடையைத் தேனிலே தோய்த்துச் **சுவைப்பதன் இன்பத்தை யடைகிறோம்.** இப்படிப்பட்ட உணர்ச்சியை உண்டுபண்ண கவி ஒருவனால்தான் முடியும். நமக்குப் பேரின்பம் தரும் வள்ளல் கவிஞன்தான். இந்தப் பேரானந்தத்தை எண்ணிக் கம்பனைக் கனிவுடன் பார்க்கிறோம். கம்பன் பெருமிதமான புன்முறுவலுடன் நம்முடைய கனிவான பார்வையை ஆமோதித்துவிட்டு மற்றொரு காட்சியைக் காட்டுகிறான் :

பெரிய கண்களையும் பிறைபோன்ற நெற்றியையுமுடைய அழகுத் தெய்வமாகிய பெண்களெல்லாம் கல்வி அறிவு நிரம்பியவர்கள். அழகும் கல்வியும் போதுமா? குணமும் இருக்கிறது. இன்னும் செல்வமும் இருக்கிறது; ஏராளமான செல்வம்; நிலை பெற்ற செல்வம். அம் மகளிரின் நெடும் பொழுது, கேட்டவர்க்கு இல்லை யென்னாது வழங்குவதிலும், விருந்தினர்களையும் நண்பர்களையும் உபசரித்து மகிழ்வதிலுமே கழிகிறது.

பெருந்த டங்கண் பிறை நுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்(கு) ஈதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே?

[நுதல் - நெற்றி; வைகலும் - தினந்தோறும்.]

அந்த வளநாடு எப்படி செல்வத்தின் சிகரமாக விளங்குகிறதோ, அப்படியே ஒழுக்கத்தின் எடுத்துக்காட்டாகவும் மிளிர்கிறது.

வர்த்தகத்திற்குச் சென்று திரும்புகிற மரக்கலங்கள் பொன்னையும், மணியையும் குவிக்கின்றன. நிலத்தின் வளமோ கற்பனைக்கும் எட்டாத செழிப்புடையது. சுரங்கங்களிலிருந்து நவரத்தினங்கள் ஏராளமாக எடுக்கப்படுகின்றன. அவரவர்கள் பிறந்த குலம் நல்ல ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒழுக்கத்தினால், பிறந்த குலத்தின் பெருமை அதிகரிக்கிறது.

கலம்சு ரக்கும் நிதியம், கணக்கிலா
நிலம்சு ரக்கும் நிறைவளம், நன்மணி
பிலம்சு ரக்கும், பெறுதற்(கு) அரியதம்
குலம்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்.

[கலம் - மரக்கலம்; பிலம் - கனிகள்.]

தீவினை யென்பதையே அறியாதவர் அந்நாட்டு மக்கள். அங்கே அகால மரணம் கிடையாது. அவர்கள் நேர்மையில் நிற்போர்; மகிழ்ச்சியில் திளைத்திருப்போர். அதனால் கோபத்தையே அறியமாட்டார்கள். அவர்கள் ஆற்றும் ஒவ்வொரு செயலின் லட்சியமும் அறமாகத்தான் இருக்கும். நற்கதி கிட்டுவதற்குக் கேட்கவா வேண்டும்?

கூற்றம் இல்லைஓர் குற்றம்இ லாமையால்,
சீற்றம் இல்லைதம் சிந்தையிற் செம்மையால்,
ஆற்ற நல்லறம் அல்ல திலாமையால்
ஏற்றம் அல்ல(து) இழித்தக வில்லையே.

[கூற்றம் - அகாலமரணம்; ஆற்றல் - செய்வது; ஏற்றம் - நற்கதி; இழித்தகவு - தீக்கதி.]

எவ்வளவு சிறப்பான நாடு அது! அங்கே ஒரு வேடிக்கை! அந்த நாட்டிலே கொடையாளிகளே கிடையாது. என்ன! என்ன!! கொடையாளிகளே கிடையாதா? ஆமாம். கிடையாதுதான். அது மட்டுமா! 'இவர் வீரர்' என்று எடுத்துக்காட்டுவதற்கு ஒருவர்கூடக் கிடையாது. இன்னும், 'இவர்கள் உண்மையானவர்கள்' என்று சிலரையாவது சொல்ல முடியுமா? முடியாது. பிறகு, 'மேதை' என்று குறிப்பிடுவதற்கு விரல் விட்டு எண்ணத்தக்க சிலர்கூடக் கிடையாது! அப்படியா! ஆமாம். கம்பன்தான் இப்படிக் கூறியது. நீங்களே பாருங்கள்.

வண்மை யில்லைஓர் வறுமை யின்மையால்,
திண்மை யில்லைநேர் செறுநர் இன்மையால்,
உண்மை யில்லைபொய் உரையி லாமையால்,
ஒண்மை யில்லைபல் கேள்வி மேவலால்.

[வண்மை - கொடைச் சிறப்பு; திண்மை - வலிமை; நேர்செறுநர் - எதிர்த்துப் போர் செய்வோர்; ஒண்மை - கல்வி அறிவுமிக்க.]

உண்மைதான். வறுமையே இல்லையென்றால், கொடை எதற்காக? எதிர்த்துப் போர் செய்வோர் கிடையாது. யுத்தம் இருந்தாலல்லவா வெற்றி பெற்றவன் 'வலிமையுடையவன்' என்று கூறமுடி

யும்? யாராவது பொய் பேசினால்தானே உண்மை பேசுவோர்க்குப் புகழ் இருக்கும்? எல்லோரும் உண்மை பேசினால்? ஆஹா! எல்லோரும் மேதை கள்! யாரைத்தான் சிறப்பாகக் கூறமுடியும்?

அந் நாட்டில் நெறி கடந்து செல்வது வெள் ளங்கள்தான்; ஜனங்களல்ல. நெற்களங்களில் இடு கின்ற குறி அழியாது: அழியக் கூடியது குங்குமத் தொய்மாலை யணிந்த மகளிர் தோள்களே, ஊடலி லும் ஆடலிலும். சிறிதாக யிருப்பது நங்கைய ரின் மெல்லிய இடைதான்; வேறொன்றுமில்லை. நன் மக்கள் வாழும் நாடு அது.

செந்நிறமுள்ள ஆம்பல் மலர்கிறது, மகளிரின் செவ்வாய் இதழ் போல! தாமரை அந்நாட்டு மக ளிரின் முகத்தைப்போல மலர்கிறது! மகளிரின் விழி, விதியை இகழ்கிறது. அம்மங்கையரின் நடை யழகின் அருகில்கூடச் செல்லத்தக்க நிலையில் இல்லை பெண் யானையின் நடை. அவ் வனிதையரின் வதனம் கலைவாழ் சந்திரனை ஏளனம் செய்கின்றது.

இளமங்கையரின் இனிய சொற்களைக் கேட்டுக் குயில்கள் சொக்கிப் போகின்றன. அவ்வளவு நய மாகப் பேச முயற்சிக்கின்றன. மங்கையரின் நட னத்தைக் கண்டு மயில்கள் வெட்கிப் போகின்றன. ஆடி ஆடிப் பார்க்கின்றன; அம்மாதிரி வருமா என்று ஏங்குகின்றன.

அந் நாட்டார் அணிந்துள்ள மலர் மாலைகளி னின்றும் குளிர்ந்த இளந்தேன் சொட்டுகிறது. எங்கும் இரத்தினமும் பொன்னும் குவிந்து கிடக்

கின்றன. அமுதத் தாரையைப் பொழிகிறது காற்று. கதைகள், பாடல்கள் செவிகளுக்குக் கனி களாக விளங்குகின்றன. செவியே வாயாகி அந்த இன்சுவைக் கனியைச் சுவைக்கிறது.

கோதைகள் சொரிவன குளிர்இள நறவம்,
பாதைகள் சொரிவன பருமணி கனகம்,
ஊதைகள் சொரிவன உறையுறும் அமுதம்,
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்.

[கோதைகள் - பூமாலைகள்; நறவம் - தேன், கனகம் - பொன்; ஊதை - காற்று; உறை உறும் அமுதம் - துளி யாக மிகுந்த அமுத நீர்; காதைகள் - கதைகள் (பாடல் கள்); செவிநுகர்-செவிகளால் நுகரப்படும்.]

கம்பன் சரயூ நதியை வர்ணித்தபோது 'தாய் முலை அன்னது' என்று கூறினன். தாய்ப் பாலுக்கு எவ்வளவு உயர்வு கொடுத்திருக்கிறன். குழந்தைக்குத் தாய்தான் தெய்வம். பால்தான் அமுதம். அந்த அமுதத்தை எப்படி ஊட்டுகிருள் என்பதைக் காட்டுகிறன் கவிஞன்.

தாலி ஐம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமு(து) ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார் செங்கை, பங்கயம்
வானி லாவுறக் குவிவ மானுமே.

[தாலி ஐம்படை - காத்தற் கடவுளான திருமாலின் சங்கம், சக்கரம், தண்டு, வில், வாள் எனும் பஞ்சாயுதங் களின் வடிவமாக அமைந்தது, இதைப் பிள்ளைகளுக்குக் காப்பாக ஐந்தாம் மாதத்தில் அணிவித்தல் மரபு; மாலை - ஒழுங்கு; பங்கயம் - தாமரை; வானிலா - வெண்ணிலா; குவிவ — (தாமரை மலர்) குவிவதை; மானும் - ஒத்தி ருக்கும்.]

தாமரை மலரை யொத்த செந்நிறமுள்ள கைகளால் ஆர்வத்துடன் அணைத்துக்கொள்கிறாள் மார்பில். வாயிலிருந்து 'சொள்ளு நீர்' ஒழுகுகிறது. அது அமுதம். குழந்தை இன்பத்தின் சிகரம். இப்படி அமுதப்பாலை, ஞானப்பாலுடன் கலந்து பருகுவிக்கின்றனர் தாய்மார்கள். அவர்கள் வணங்குதற்குரிய தெய்வங்கள்.

ஒரு சௌந்தர்ய உலகத்தை நிர்மாணிக்க விரும்பியவன் கம்பன். அவன் விரும்புவது அக அழகு. அக அழகுக்கு மேற்பூச்சாகத்தான் புற அழகைக் கருதுகிறான். அக அழகிலே நின்றது புற அழகு. உண்மையை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது நீதி. பெண்களின் அன்பிலே நின்றது அறம். அவர்களுடைய கற்பில் நின்றது தேச வளமாகிய காலமாரி. குண அழகு, நீதி, அறம், கற்பு இந்தத் தூண்கள்தாம் தாங்கின கோசல நாட்டை.

பொற்பில் நின்றன பொலிவு, பொய்யிலா
நிற்பில் நின்றன நீதி, மாதரார்
அற்பில் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பில் நின்றன கால மாரியே.

[பொற்பு - அக அழகு; பொலிவு - புற அழகு; பொய்யிலா நிற்பில் - பொய்ம்மை இல்லாத நிலைமையால்; அற்பு - அன்பு.]

கம்பன் ஒரு லட்சியவாதி. சமுதாயம் எப்படி இருக்கவேண்டுமென்று அவன் கண்ட கனவின் எல்லையைத்தான் நாட்டுப் படலத்தில் காண்கின்றோம். அவன் சிருஷ்டித்த உலகம் அற்புதமானது

தான்; சிந்தனையின் ஓட்டந்தான்; கனவுதான். ஆனால் முற்றுப்பெற முடியாத கனவல்ல.

சமுதாயத்திலே பெண்கள் எப்படிப்பட்ட ஸ்தானத்தை வகிக்கவேண்டுமென்று கம்பன் ஆசைப்பட்டிருக்கிறான்!

பெண் — தெய்வம், குண அழகு, அக அழகு, ஆகியவைகளின் எடுத்துக்காட்டு. அன்பின் சிகரம். ஆஸ்தியின் மணிமுடி. கலைகளின் இருப்பிடம்.

கம்பன் ஒரு மறுமலர்ச்சிப் பித்தன். அவன் தீவிர அரசியல் வாதியுங்கூட. அவன் சிருட்டித்த உலகில் ஏழை இல்லை, பணக்காரனில்லை. எவ்வளவு நெஞ்சுத் துணிவான வார்த்தை! வலிமையினால் மற்றவரை அடக்கியாளும் ஈனச் செயல் அங்கே இல்லை. சிலர்தானா படிக்கவேண்டும்? சிலருக்குத் தான் படிப்பு வருமா? அதற்குப் பாரபட்சமுண்டா? இல்லை. எல்லாருக்கும் வரும். அனைவரும் படிக்கத்தான் வேண்டும். சிலர் மட்டும் படித்துவிட்டு மற்றவர்களை மட்டந்தட்ட முடியாது. செல்வம், கல்வி, அழகு எல்லாம் இருக்கின்றன. இவை யாவும் ஒழுக்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அதன்மேல் நிற்கின்றன. எவ்வளவு உன்னதமான சிருஷ்டி! அவன் கண்ட கனவு நாட்டிலே குடி மகன் கட்டாயமாக, அழகனாவும், ஆண்மையாளனாகவும், படிப்பாளியாகவும், பணக்காரனாகவும் இருக்கத்தான் வேண்டும். கம்பனின் வள்ளல் தன்மையிலிருந்து வெளிவந்த சௌந்தர்ய உலகம் கோசல நாடு.

---

4. ஞான பூமி

கம்பனின் வள்ளல் தன்மையிலிருந்து எழுந்த கோசல நாட்டின் இராஜதானி அயோத்தி. எதிர் கால உலகம் எப்படி இருக்க வேண்டுமென்று அவன் கண்ட கனவின் தோற்றம் அது. அதைக் காண்போம் :

அவன் சிருஷ்டித்த நகரைக் கண்டு எப்படி யெல்லாம் ஆச்சர்யப்படுகிறான் பாருங்கள்.

அந்த நகரம் எப்படியிருக்கிறது என்று நிர்ண யிக்க முடியாமல் திண்டாடுகிறான் கவிஞன். அதன் சிறப்பு அவ்வளவு உயர்ந்தது. ஒப்பிட்டுக்கூற வேறு பொருளும் கிடையாது.

“இது பூமி தேவியின் திருமுகமோ? அம் முகத் திலே பிரகாசிக்கும் திலகமோ? நிறைந்த நீண்ட மங்கல சூத்திரமோ? இரத்தின மாலையோ? உயிரின் இருப்பிடமோ? இலக்குமி அமரும் இனிய தாமரை மலரோ? திருமாலின் திருமார்பில் அணியும் நல்ல இரத்தினங்கள் வைக்கப்பட்டுள்ள பொன்னால் செய் துள்ள பெட்டியோ? இல்லை, வைகுண்டமா? அல் லது, உலக முடிவிலே எல்லாப் பொருள்களும் தங் கும் இடமாகிய திருமாலின் வயிறோ?” என வியக் கிறான்.

கம்பன் கற்பனையின் சிகரம். சிந்தனைக் கெட்ட முடியாத செய்திகளைத் தெரிவிப்பவன். அது அவனால்தான் முடியும். அவன் மகாகவி.

நகரத்தை அடைவோம்.

உவமை கூறமுடியாத சிறப்புவாய்ந்தவை நகரத்தின் எல்லை மதில்கள். அறிவைப்போல் உயர்ந்தவை. மலைபோல் பெரியவை. முடிவு காண முடியாதவை, வேதத்தைப்போல. காத்தல் தொழிலைச் செய்வதால் கடவுள் தன்மையை யடைந்திருக்கின்றன அம்மதில்கள். பக்தன்தான் இறைவனை யடைய முடியும். அதேபோல, நண்பன்தான் இம் மதில்களை அடைய முடியும். 'பெருமை மிக்க இந்த அயோத்தியைவிட தேவலோகம் உயர்ந்ததோ?" என்று எட்டிப் பார்ப்பது மாதிரி உயர்ந்திருக்கின்றனவாம் மதில்கள். கருடனையும், காற்றையும், விரோதியின் மனத்தையும், தவிடு பொடியாக்கும் பொறிகள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை மட்டுமா? கொசுவைக்கூடக் கொன்றுவிடும் இயந்திரம் ஒன்றும் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறதாம்! இப்படிப்பட்ட பொறிகள் ஒரு நாளும் உபயோகிக்கப்பட்டதில்லை. எனவே, இந்த மதில்கள் காவலுக்காக அமைக்கப்படவில்லை; அழகுக்காகவே அமைந்தனவாகும்.

மதில்களை அடுத்துக் காண்பது அகழி. கடல் போன்ற அகழி. விலை மகளிர் மனத்தைப்போல் கீழ் நோக்கியது. அவ்வளவு ஆழம். நீர் தெளிவில்லாம லிருக்கிறதாம், நன்றாகக் கற்காதவன் பாடிய புன்கவி மாதிரி. கன்னியிடம் எந்த ஆடவனாவது நெருங்க முடியுமா? அதைப்போல அகழியிடம் யாரும் நெருங்கமுடியாது. ஆகாயத்திலே வட்டமிட்டு வரும் வெள்ளை மேகங்கள் அகழியைக்

கண்டதும் கடல் என்று மயங்குகின்றன. அதில் படிந்து நீரை அருந்தி மேலெழுகின்றன. அடுத்துள்ள மதிலைக் கண்டு மலை யென மயங்கி நீரைப் பொழிகின்றன. மதிலை முற்றுகையிட்டதுபோன்று தாமரை மலர்கள் செழித்து வளர்ந்து நிற்கின்றன.

மதிலை அடுத்துப் பெரிய சோலை. அது பொன் மதிலுக்கு உடுத்திய நீல ஆடையைப் போன்றிருக்கிறது, திருஷ்டி பரிகாரத்திற்காகப் போலும்!

வானளாவிய கோபுரங்கள். ஒழுக்கங்களை உபதேசிக்கும் நான்கு வேதங்களைப் போன்று நான்கு வாயில்கள். தீக்குணமுடையவர் அந்த வாயிலில் நுழைந்தாலுங்கூட அரசனது செங்கோல் மகிமையினால் தூய மனத்தினராய் மாறிவிடுவர்.

அந்தக் கோபுர வாயிலில்தான் எவ்வளவு வேலைப்பாடுகள்! எவ்வளவு பளிங்குக் கற்கள்! அதன்மேல் ஒளிவீசும் பசும் பொன் தகடு அடித்திருக்கிறது. அதிலே இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. சுவர்களின் பக்கத்தில் வெள்ளிக் கைப்பிடிகள். அவற்றில்தான் எவ்வளவு விசித்திரங்கள்! எவ்வளவு வஜ்ஜிரத் தூண்கள்! அதில் மரகத இழைப்பு வேலை. அதற்கு மேலே சிம்ம வடிவங்கள் அலங்காரமாக நிற்கின்றன. அத்துடன் உயிருள்ளவை போலவும் காணப்படுகின்றன. கண்கள் ஜொலிக்கின்றன.

எல்லையை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா? நகரத்துக்குள்ளேயே போய்விடுவோம்.

ஆஹா! எப்படிப்பட்ட மாளிகைகள்! முழு மதிக்கும் மாசுண்டு; இங்கேயுள்ள மாளிகைகள் வெண்மை நிறத்திலே மதியையும் தோற்கடிக்கின்றன. ஓங்கி உயர்ந்த வெண்ணிற மாளிகைகள். மேல் நோக்கி எழும் பாற்கடலின் அலைகளைப் போல் விளங்குகின்றன. கலாவதியின் பரிபூரணக் கடாட்சம் பெற்றவரிடையே கருநிறம் அண்டுமா? அம்மாளிகைகள் ஒளியில் சூரியனையும் வெல்கின்றன.

திங்களும் கரிதென வெண்மை தீற்றிய
சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகை,
வெங்கடுங் கால்பொர மேக்கு நோக்கிய
பொங்கிரும் பாற்கடல் தரங்கம் போலுமே.

[தீற்றிய - பூசிய; சங்க வெண்சுதை - வெண்சங்குகளைச் சுட்டுச் செய்த சுண்ணாம்புச் சாந்து; தவள மாளிகை - வெண்ணிறமுள்ள வீடுகள்; வெங்கடுங்கால் பொர - பயங்கரமான பெருங் காற்று வீச; மேக்கு - மேல்; பொங்கிரும் - பொங்கி யெழுகின்ற; தரங்கம் - அலை.]

வெண் மாளிகைகள்மீது பொற்றகடு வேயப்பட்டிருக்கிறது. வெள்ளியங்கிரிமீது கதிரவனின் இளவெயில் விழுவதைப் போலிருக்கிறது, அந்தக் காட்சி.

மாளிகையினுள்ளேயே புகுந்துவிட்டோம். கண்களை இமைக்க விரும்பவில்லை. அழகைப் பரிபூரணமாக அனுபவிக்க முயற்சிக்கும்பொழுது இமைக்கலாமா? அந்த அழகைப் பருகும்பொழுது கண் இமைப்பின்மையால் நாம் கூடத் தேவர்களாகி

விடுகிறோம் என்று கவிஞன் கூறுகிறான். கட்டிடங்களிலிருந்து வரும் தேஜோ மயமான ஒளி நம்மீது பட்டு திவ்ய சரீரத்தைப் பெற்றுவிடுகிறோம். பேஷ், பேஷ்! அம் மாடமாளிகைகள் அனைத்தும் மணியினாலும் பொன்னினாலுமே ஆக்கப்பட்டிருக்கின்றன.

துவஜஸ்தம்பம் ஓங்கி நிற்கிறது. சந்திரனைக் கூட உராய்வது மாதிரி வானளாவி நிற்கின்றனவாம் கொடி மரங்கள்!

பொன்திணி மண்டப(ம்) அல்ல, பூத்தொடர்
மன்றுகள் அல்லன, மாட மாளிகை;
குன்றுகள் அல்லன, மணிசெய் குட்டிமம்;
முன்றில்கள் அல்லன, முத்தின் பந்தரே.

[பொன்திணி - சுவர்ணத்தால் வலிமையாகக் கட்டப்பட்ட; மன்றுகள் - பலர்கூடும் மண்டபங்கள்; குட்டிமம் - தலங்கள்; முன்றில்கள் - முற்றங்கள்.]

சுவர்ணத்தால் கட்டப்பட்ட வலிமையான மண்டபங்கள்; மலர்களால் அமைக்கப்பட்ட மாடங்கள்; பலர் கூடுமாறு அமைக்கப்பட்ட கூடங்கள்; உப்பரிகைகளோடு கூடிய மாட மாளிகைகள்; செய்குன்றங்கள்; இரத்தினம் பதித்த தளங்கள்; முத்துக்கள் வேய்ந்த முற்றங்கள். எங்கு நோக்கினும் இப்படிப்பட்ட காட்சிகள்தாம் அங்கே.

இளம் பெண்களின் குதலைச் சொற்கள் வேய்ங்குழலின் இன்னிசை கானத்தை ஒத்திருக்கின்றன. மங்கைப் பருவ மகளிரின் மழலை மொழிகள் மகர யாழின் நாதத்தைப் போலிருக்கின்றன. மடந்தையரின் சொற்கள் இனிய கானத்தின் எல்லையைக்

காட்டுகின்றன. இவர்களது பேச்சு இப்படி. இவர்கள் பாடவே ஆரம்பித்து விட்டால்! அப்படியே மெய்ம்மறந்து போகிறோம். உடல் புளகாங்கித மடைகிறது. இன்பக் கடலில் திளைக்கிறோம்.

குழலிசை மடந்தையர் குதலை, கோதையர்
மழலையங் குழலிசை, மகர யாழிசை,
எழிலிசை மடந்தையர் இன்சொல், இன்னிசை
பழையர்தம் சேரியிற் பொருநர் பாட்டிசை.

[குழலிசை மடந்தையர் - அப்பொழுதுதான் மயிர் முடி கூடப் பெறுகிற இளம் பெண்கள்; பழையர் - கள் விற்பவர்கள்; பொருநர் - கூத்தர்கள்.]

சேரியிலுள்ள கூத்தர்களுடைய பாட்டு இனிய கீதத்தை ஒத்திருக்கிறது.

பகுத்தறிவில்லாத பறவைகூட இந்நாட்டு மகளிரின் இனிய கானத்திலே சொக்கிப் போகிறது. மகர யாழிலிருந்து இன்னிசை எழுகின்றது. ஆரோகண அவரோகண முறையில் இறங்கியும் எடுப்பாகவும் வாய்ப்பாட்டுடன் ஒத்துப்போகும் தன்மை வியக்கத்தக்கது. அதற்கேற்ப மத்தளங்கள் ஒலிக்கின்றன. பெண்களுடனே உறவாடும் கிள்ளைகள் கண் மூடி அயர்கின்றன.

கவிஞன் கூறுகிறபடி அதைக் கேளுங்கள்.

இறங்குவ, மகரயாழ் எடுத்த இன்னிசை
நிறங்கிளர் பாடலால் நிமிர்வ; அவ்வழி
கறங்குவ வள்விசிக் கருவி கண்முகிழ்த்(து)
உறங்குவ மகளிரோ(டு) ஓதுங் கிள்ளையே.

[திறங்கிளர் - வண்ணம் விளங்குகிற; கறங்குவ - ஒலிப்பன ; வள்விசி - தோலாற்கட்டப்பட்டுள்ள ; முகிழ்த்து - மூடி ; கிள்ளை - கிளி.]

அருங் கலைகளிலே இன்னிசை ஒரு பகுதி. நாட்டியம் மற்றோர் பகுதி. இதோ ஒரு அரங்க மேடை :

அரங்கிடை மடந்தையர் ஆடு வாரவர்
கருங்கடைக் கண்ணயில் காமர் நெஞ்சினை
உருக்குவ, மற்றவர் உயிர்க ளன்னவர்
மருங்குல்போல் தேய்வன வளர்வ(து) ஆசையே.

மத்தள வாத்தியங்களுடனும் இன்னிசை கானத்துடனும் நாட்டியம் நடக்கிறது. மடந்தையர் கைவரிசை காட்டுகின்றனர். அவ்வப்பொழுது காட்ட வேண்டிய உணர்ச்சிகளை அங்கங்கள் வெளிப்படுத்துகின்றன. அதிலே கண்களும் பங்கு கொள்கின்றன. மையுண்ட கண்களின் கடைக்கண் பார்வையான 'வேலாயுதங்கள்' காமர் நெஞ்சில் பாய்கின்றன ; மனத்தை உருக்குகின்றன. ஆவி சோர்கிறது ; ஆசை பெருகுகிறது. இப்படி யெல்லாம் ஆடவர் உள்ளத்தை ஆட்டி வைக்கின்றனர் அக்கட்டழகிகள். பரிபூரண வளர்ச்சியிலே மேலோங்கி நிற்கும் அங்க எழுச்சி காமுகர்களைப் பித்தர்களாகவே ஆக்கி விடுகிறது.

அதோ, அங்கே காணப்படுபவை சித்திரங்களா? ஆம் ; சித்திரங்கள் தாம். அவை உயிர் பெற்றவை போல் காணப்படுகின்றனவே. தம்மைத் தீட்டும் மகளிரின் அழகைப் பருக உயிர் பெற்று விட்டனவோ ? கண் இமைக்காமலே காண்கின்றனவே !

பொழுதுணர் அரியஅப் பொருவின் மாநகர்த்
தொழுதகைம் மடந்தையர் சுடர்வி ளக்கெனப்
பழுதறு மேனியைப் பார்க்கும் ஆசைகொல்
எழுதுசித் திரங்களும் இமைப்பி லாதவே.

[பொழுதுணர் அரிய - பெண்களின் ஒளி மிகுதியால் இரவா பகலா என்றறிய அருமையாயுள்ள ; பொருவில் - ஒப்பில்லாத ; தொழுத கைம்மடந்தையர் - கற்பினுல் யாவரும் கைகூப்பி வணங்குதற்குரிய பெண்கள்.]

அங்குள்ள மாளிகைகள் ஜகஜ்ஜோதியாக விளங்குகின்றனவே. என்ன காரணம்? ஒளி மிகுதியால் பகலா இரவா என்று கூடத் தெரிவதில்லை. நெய் விளக்குகளா அவ்வளவு வெளிச்சத்தைத் தருகின்றன? அல்லது இரத்தின தீபங்களா? இல்லை. முகளிரின் உடம்பின் ஒளி. வணங்குதற்குரிய கலாசுந்தரிகளாகவும் சுடரொளியாகவும் விளங்குகிறுர்கள் அந்நாட்டுப் பெண்கள்.

தணிமலர்த் திருமகள் நயங்கு மாளிகை,
இணரொளி பரப்பிநின்(று) இருள் துரப்பன
திணிசுடர் நெய்யுடைத் தீவி ளக்கமோ
மணிவிளக் கல்லன; மகளிர் மேனியே.

[தணி - குளிர்ந்த ; நயங்கு - வாழ்கின்ற ; இணர் - தொகுதி ; துரப்பன - நீக்குபவை ; திணி - செறிந்த.]

இந்த உலகத்தில் ஒருவரின் வருத்தந்தான் மற்றவரின் மகிழ்ச்சியாக மிளிர்கிறது. பெண்களின் முகத்திலே புன்முறுவல் பூக்கிறது. அதைக்கண்ட காமுகர் உள்ளம் கொடிய வேதனையடைகிறது. உலக நியதிக்கு உதாரணம் இது. இம்மடந்தையர்களால் ஆடவர்கள் அல்லலுறுவதைக் கண்ட

மார்பகம் பெண்களைப் பழிவாங்க எண்ணி நுண்ணிய இடைக்கு அதிக கனத்தைக் கொடுக்க மூனே வதைப்போல செழித்துப் பருக்கிறது! அதற்கு மேலே ஆபரணங்கள் வேறு! சிற்றிடை ஒடிந்து விடுமோ என்று கூடத் தோன்றுகிறது!

முளைப்பன முறுவல், அம் முறுவல் வெந்துயர்
விளைப்பன ; அன்றியும் மெலிந்து நாடொறும்
இளைப்பன நுண்ணிடை ; இளைப்ப, மென்முலை
திளைப்பன முத்தொடு செம்பொன் ஆரமே.

[விளைப்பன - உண்டாக்குகின்றன.]

கொண்டுவந்து குவிக்கப்படும் கப்பப் பொருள்களை அளந்து வாங்குவதற்கான மண்டபங்கள். அன்ன நடையினரான மெல்லியரின் அரங்கு மண்டபங்கள். மறை ஓதும் மண்டபங்கள். அருமையான விஷயங்களை ஆராயும் கலை மண்டபங்கள். இப்படி வீதிகள் தோறும் இருக்கின்றனவாம்.

மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம் ;
அன்னமென் னடையவர் ஆடு மண்டபம் ;
உன்னரும் அருமறை ஓது மண்டபம் ;
பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்.

[தருதிறை - அரசர்கள் கொடுக்கிற கப்பம் ; உன்ன அரு - நினைவில் வைத்துக் கொள்வதற்கு அருமையாகிய ; பன்னஅரு-ஆராய்ச்சி செய்வதற்கு அருமையாயுள்ள ; கலைதெரி பட்டி மண்டபம் - சாத்திரங்களை ஆராயும் கல்வி மண்டபங்கள்.]

அயோத்தி நகரத்தின் ஒரு கடை வீதிக்கே அமராவதி ஈடாகாதென்றால் அயோத்தியின் அழகை வர்ணிக்க இயலுமா? அந்நகர மகளிர் காலத்தைக் கழிக்கும்வகை கேட்பதற்கே இன்ப

மானது. தம் கணவருடன் ஊடலிலும் கூடலிலும் சிறிது நேரம். உணர்வும் உயிரும் ஊட்டும் இன்னிசை கானத்தைக் கேட்டுக் கொண்டிருப்பது சிறிது நேரம். பின்னர் நீராட்டம். அப்புறம் அழகிய மலர்களைப் பறித்து அணிந்துகொள்ளுதல். இப்படியெல்லாம் இன்பப் பொழுது போக்குகின்றனர்.

பெண்கள்தான் இப்படி. ஆண்கள்? அதோ பாருங்களேன்: யானைகளோடு யானைகளை முட்ட விடுகிறார்கள். அதோ ஒரு கூட்டம் வில்வித்தை பழகுகிறது. குதிரைகளின் மீதேறி செண்டாடுகிறார்கள் சிலர்.

இந்நாட்டினர் இயற்கையோடு வாழ்கிறார்கள். இன்பம் துய்க்கிறார்கள். காதலை வளர்க்கிறார்கள். கலைகளைப் பெருக்குகிறார்கள். கலா ரசிகமணிகள். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதை நிரூபிக்கிறார்கள். வாழ்க்கையைச் சுகிக்கும் வழியை உலகத்தாருக்கு வழங்குகிறார்கள். கம்பன் கண்டது புது உலகம். புதுமை நிறைந்த உலகம். காவலில்லாத அரசு அது. கள்வர்களில்லை. வறுமை யில்லை. வழங்குவார் இல்லை.

வருங்கால சந்ததியார் மீதுதான் கம்பனுக்கு எவ்வளவு காதல்! மக்கள் எப்படி வாழவேண்டுமென்று அவன் ஆசைப்பட்டிருக்கிறான்!

தெள்வார் மழையும் திரையாழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மாநகர் வாழு மாக்கள்,
கள்வா ரிலாமைப் பொருட்காவலு மில்லை, யாதும்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை மாதோ!

[தெள்வார்மழைஉம்-தெளிவான நீரைச் சொரிகின்ற மேகங்களும் ; திரையாழி-அலைகளையுடைய கடல் ; உட்க-அஞ்சும்படி ; முரசம் அதிர்-பேரிகைகள் ஒலிக்கின்ற.]

கற்க வேண்டியவைகளை விட்டுவிட்டுப் பொழுது போக்கமாட்டார்கள் அயோத்தி மக்கள். எனவே அங்குக் கல்வி இல்லாரில்லை, கல்வி வல்லவர்களு மில்லை. எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்றிருக்கிறார்கள்.

கல்லாது நிற்பார் பிறரின்மையின், கல்வி முற்ற
வல்லாரு மில்லை ; அவைவல்லரல் லாரு மில்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

[கல்வி முற்ற - கல்வி கேள்விகளை நன்று யறிந்த ; அவை - (முதலடியில் கூறிய) கல்வி கேள்விகள்.]

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்(து), எண்ணில் கேள்வி
ஆகும் முதல்திண் பணை போக்கி, அருந்த வத்தின்
சாகம் தழைத்(து),அன்(பு) அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியொன்று பழுத்தது போலு மன்றே.

[ஏகம் - வித்து ; திண்பணை - வலிய கிளைகள் ; போக்கி-வளரவிட்டு ; சாகம் - இலைகள் ; போகம் - இன்பம்.]

கல்வி என்ற வித்திலிருந்து ஒரு பெரிய கற்பக விருட்சம் எழுகிறது. அதன் கிளைகள் எண்ணிறந்த கேள்விகள். இலைகள் அரிய தருமம். அன்பு மொட்டாக அரும்புகிறது. தருமம் மலராக மலர் கிறது. இன்பமாகிய கனி பழுக்கிறது. இப்படிப் பட்ட அருங்கனியை அந் நாட்டினர் தினந்தோறும் உண்டு களிக்கின்றனர்.

கவிஞன் உண்டாக்கிய ஒரு புதிய சமுதாயம் அது. கள்வர்களையும், பிச்சைக்காரர்களையும் உண்டாக்கிவிட்டு அவர்களைத் தண்டித்துக் கொண்டிருக்காது அந்த சமூகம்; கம்பனின் அகக் கண்ணிலே தோன்றியது அந்த அற்புத சமூகம். இரப்பார் இல்லை. கொடுப்பார் இல்லை. களவு நடக்குமா? காவல்தான் ஏன்? வெறும் செல்வத்தை மட்டும் வைத்துக்கொண்டு அந்த மக்கள் சோம்பேறி வாழ்க்கை நடத்தவில்லை. அங்கே ஒழுக்க தேவதை வீதிதோறும் வீடுதோறும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள். இதை அஸ்திவாரமாகக் கொண்டே மற்றவை மலர்ந்திருக்கின்றன. அறிவுக் கலையும் அழகுக் கலையும் போற்றி வளர்க்கப்படுகின்றன. அங்குள்ள பெண்மணிகள் ரூபசுந்தரிகள், ஞான சுந்தரிகள், கலாசுந்தரிகள், கற்பின் மணிகள், கல்வியின் வித்துக்கள். ஆடவரும் அப்படியே. அவர்கள் வீரத்தின் எடுத்துக்காட்டு, சீலத்தின் சிகரம்.

அயோத்தி வாசிகளின் வாழ்க்கை முறை நமக்கு விசித்திரமாகவே தோன்றுகிறது. ஏனெனில் நாம் அவர்களுக்குப் பல காத தூரத்தில் நிற்கிறோம். கம்பன் கனவு நனவாகுமா?



5. அரசு முறை

பெண் தியாகத்தின் உருவம். "என் உயிர் போகட்டும், என் பிள்ளை பிழைத்தால் போதும்" என்ற வார்த்தை தாய் ஒருத்தியிடமிருந்து தான் வரும். தாயின் ஒவ்வொரு செய்கையும் மைந்தர்களைக் குறிக்கோளாகக் கொண்டே நிற்கின்றது. சேவைக்கே தன்னைச் சமர்ப்பித்தவள் தாய். பிரதிப்பயனைக் கருதாது அன்பு செய்பவள். தாய், பிள்ளைமீது கொண்டுள்ள காதலே மாசுமறுவற்றது.

அன்பிலே தசரதர் தாய்க்குச் சமானமானவர். விரும்பிய நலத்தை யெல்லாம் செய்வதில் தவத்தை ஒத்தவர். பொதுமக்களை நற்கதியில் சேர்க்கும் அரிய பணியைத் தலைமேற்கொண்டதால் அரசர் புத்திரனுகவுமானுர். தீயவழியிற் செல்வோரைத் தண்டிப்பதால் நோயாகவுமானுர். அவர்களைத் தண்டித்து நல்வழிப் படுத்துவதால் மருந்து மானுர். அரிய பொருள்களை ஆராயும் தன்மையிலே அறிவின் சொரூபமானுர்.

கம்பன் தாய்க்குலத்தின் மீது கொண்டிருந்த ஒப்பற்ற பக்தியை இப்பாட்டின் சிகரமாக வைத்திருக்கிருன்.

தாயொக்கும் அன்பின் ; தவமொக்கும்
நலம்ப யப்பின் ;
சேயொக்கும் முன்நின்(று) ஒருசெல்கதி
உய்க்கும் நீரால்,

நோயொக்கும் என்னின், மருந்(து)ஒக்கும்;
நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறி(வு)ஒக்கும்
எவர்க்கும் அன்னான்.

[பயப்பின்-அளித்தல்; சேய்-புத்திரன்; ஒருசெல்கதி-ஒப்பில்லாத செல்லுதற்குரிய நற்கதி; நீரால்-தன்மையினால்; நுணங்கு-(சூக்குமமான) நுண்ணிய.]

"இராமனைப் பெற்றெடுத்த தசரதன்" என்று தான் தசரதரை நமக்கு அறிமுகம் செய்விக்கிறான் கம்பன். தசரதர் தருமத்தின் வடிவத்தை நிகர்த்தவர். அவர். பரிபூரணத்வம் அடைந்தவர். அரசர்க்கு வேண்டிய குணங்கள் யாவும் அவரிடம் நிறைந்திருந்தன. அத்துடன் எல்லாக்குணங்களும், "நான் என்ன பணி செய்ய?", "நான் என்ன பணி செய்ய?" என்று நின்றிருந்தனவாம். உண்மை யறிவும், இரக்கமும், தருமமும், அமைதியான குணமும், வீரமும், நீதியும் தசரதரின் ஆபரணங்கள்.

ஈய்ந்தே கடந்தான் இரப்போர் கடல்;
எண்ணில் நுண்ணூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும்
அளக்கர்; வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை;
கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவில்
தொடர் போக பௌவம்.

[இரப்போர்-யாசிப்போர்; நுண்ணூல்-சாத்திரங்கள்; அளக்கர்-கடல்; காய்ந்தே-அழித்தே; வேலை-கடல்; கருத்து முற்ற - மனம் திருந்தியபடி; தோய்ந்தே-அனுப

வித்து; திருவில் தொடர் போகம் பௌவம் - செல்வத்தினோடு கூடிய இன்பசாகரம்.]

எத்தனைக் கடல்களை அவர் கடந்திருக்கிறார் பாருங்கள் :

யாசகர்களாகிய சமுத்திரத்தைத் தானம் செய்து கடந்தார். சாத்திரங்கள் என்னும் கடலை அறிவினால் ஆராய்ச்சிசெய்து கடந்தார். பகைவராகிய கடலை ஆயுதத்தாலழித்துக் கரையேறினார். இவ்வுலக இன்பத்தைத் திருப்தியாக அனுபவித்தே நீந்தி வெளியேறினார். அவருடைய காரியங்கள் எவ்வளவு பெரியவை என்று காட்டுவதற்கே கடலை ஒப்பிட்டுக் கூறினான் கவிஞன்.

வெள்ளப் பெருக்குமில்லை, தண்ணீர்ப் பஞ்சமும் கிடையாது. மாதம் மும்மாரி. வெள்ளம் இடையறாது ஒரு வழி ஓடுகிறது. ஒன்றிற்கொன்று பகையான பறவைகளும் விலங்குகளும் பகைநீக்கி ஒத்து வாழ்கின்றன. சிங்கமும் ஆடும் ஒரு துறையில் நீரருந்தும் காட்சியைக் கண்டிருக்கிறான் கவிஞன். பொதுமக்களைப்போல மிருகங்களும் அன்பின் வயப்பட்டுவிட்டன. வேசையருள்ளம் கூட ஒருவழி ஓடிற்றாம். வேசையராகப் பிறந்து விட்டவர்கூட ஒரு நாயகனை மணந்தின்புற்றனராம். இறைவனால் ஆபரணமாக அளிக்கப்பட்ட கற்பை மனிதன் பணம் கொடுத்து வாங்க முடியாது அங்கே. ஆட்சியின் சிறப்பு அப்படிப்பட்டது.

வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமும், ஒருவழி யோட நின்றவன்;

தள்ளரும் பெரும்புகழ்த் தயர தப்பெயர்
வள்ளல்வள் ளுறையயில் மன்னர் மன்னனே.

[தள்ளரும்-நீக்குதற்கரிய; வள் உறை அயில் மன்னன்-தோலுறை அமைந்த வேற்படையை யுடைய சக்கரவர்த்தி.]

தசரதருடைய வெண் கொற்றக்குடை அளவிறந்த சிறப்பு வாய்ந்தது. அதன் சிறப்பைத் தெரிவிக்க ஒரு உதாரணம்:

சந்திரனிடம் தேய்ந்து வளர்கின்ற குறை இருக்கிறது. தசரதனின் குடைமதி தேயாமலேயே சந்திரனின் தொழிலாகிய, தண் அமுதப் பிரவாகத்தை யளித்து இருளைப் போக்குகிறது. எனவே விண்மதி வேண்டியதில்லை என்றுகூடக் கவிஞன் கருதுகிறான். எல்லா உயிர்க்கும் இன்பம் அளித்தலும் துன்பத்தை ஒழித்தலும் அக் குடைமதியின் தொழில்கள்.

தசரதர் மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவித்தார். அதுமட்டுமல்ல. எல்லா உயிர்கட்கும் தான் உடம்பாகவும் விளங்கினார்.

பொது ஜனங்களுக்காக அரசன் இருக்கின்றானா? அரசனுக்காகப் பொது மக்கள் இருக்கின்றனரா? மக்களுக்காகவே வாழ்ந்தார் தசரதர். அரசு முறையின் அச்சாணி அவர். மக்களைத் துச்சமாக எண்ணுவது பேதமை. தன்னுடைய சுக போகங்களுக்காகவே பொது மக்கள் இருக்கின்றனர் என்று நினைப்பவன் கடமை யறியாதவன். மக்களின் காவலனாக விளங்க வேண்டும் அரசன். அரசன் உடல், மக்கள் உயிர். உயிர் உயர்ந்தது.

கவியரசன் புவியரசனுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிறான்.

**வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிரிலா உலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்.**

[வான் - சிறந்த ; பூண் அணி - ஆபரணங்களை அணிந்த ; மடங்கல் - சிங்கம் ; மொய்ம்பு-வலிமை ; செயிரிலா-குற்ற மற்ற ; சென்று வாழ் உயிர் - இயங்கும் பிராணிகள் ; நின்று வாழ் உயிர் - இயங்கும் தன்மையல்லாத மரம் புல் முதலியன.]

தசரதர் தன் இராஜ்யத்தை எப்படிப் பாது காத்தார் என்று கம்பன் சொல்வதைக் கேளுங் கள் :—

**எய்யென எழுபகை எங்கும் இன்மையால்,
மொய்பெருத் தினவுறு முழவுத் தோளினன்
வையக முழுவதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய்யெனக் காத்(து)இனி(து) அரசு செய்கின்றான்.**

[எய்யென - அம்பை என் மீது எறி என்று வீரவாதம் செய்து ; எழுபகை - வருகின்ற பகை ; மொய்பெருத் தினவு-போரைப் பெருமல் தினவுமிகுந்த ; முழவுத்தோள் - மத்தளம் போலத் திரண்டுருண்ட தோள்கள் ; வறிஞன் - தரித்திரன் ; செய் - சிறு கழனி.]

மிகவும் தரித்திர நிலையில் உள்ள ஒருவன். அவ னுக்கு ஒரே ஒரு சிறு கழனி. அதைக் கொண்டு தான் அவன் ஜீவனம் நடத்த வேண்டும். அந்தச் சிறு கழனியை அவன் எவ்வளவு போற்றிப் பாது காப்பான் ? களை எடுத்து நீர் பாய்ச்சி எவ்வளவு

உழைப்பான்! மற்றவர்களை ஏவவும் மாட்டான். காரணம் அவன் ஏழை. ஒரே ஒரு கழனிதான். இரவும் பகலும் அதைக் கண்போலக் காப்பானல்லவா? அப்படி உலகத்தைத் தசரதர் காத்து வருகிறார். மக்கட்குத் தொண்டு செய்வதைத் தவிர அரசனுக்கு வேறு வேலையில்லை. பகைவரே கிடையாது. எதிரியை நினைத்துக் கலங்க வேண்டியதில்லை. அல்லது நாடு பிடிக்கத்தான் கவனம் செலுத்த வேண்டுமா? அதுவும் கிடையாது. எனவே, ஒரு கழனி மாதிரி ஆண்டார்.

தசரதரின் ஆட்சியை இதைவிட அழகாகக் கூற முடியுமா? கவிஞனின் கனவு ஒரே கவியில் பரிபூரணத்துவம் பெற்று மிளிர்கிறது.

6. அருணோதயம்

மகிழ்ச்சியிலே திளைத்திருந்த மன்னனுக்கும் ஒரு குறை யிருந்தது.

அறுபதி னாயிரம் ஆண்டு மாண்டுற,
உறுபகை ஒடுக்கிஇவ் வுலகை ஓம்பினேன்,
பிறிதொரு குறையிலை ; எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டரோ.

[மாண்டுற - கழிய ; ஓம்பினேன் - காத்தேன் ; எற்பின் - எனது காலத்திற்குப் பிறகு ; மறுகுறும் - (காப்பவரில்லாமல்) கலங்கிவிடும் ; மறுக்கம் - மனக்கலக்கம்.]

அறுபதினாயிரம் ஆண்டு ஆனந்தமாகக் கழித்துவிட்டார். பிள்ளைகள் இல்லை என்ற ஒரே குறைதான். சந்ததி வேண்டுமே என்கிற ஆசையாலல்ல அவர் 'பிள்ளை இல்லையே' என்று குறைப்படுவது. தனக்குப் பின் இப் பூவுலகத்திற்குத் தொண்டு செய்ய ஒருவன் வேண்டுமே என்றுதான் கவலைப் படுகிறார்.

தொண்டு செய்வதில்தான் உண்மை இன்பம் இருக்கிறதென்பதைக் கண்டார். பொது மக்களுக்குத் தொண்டுசெய்யவே புத்திரனை விரும்புகிறார் என்பது அவரின் கடமை யறிந்த தியாகத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கலாம். ஆனால் அதிலேயும் சுயநலம் இருக்கத்தான் செய்கிறது. பொது மக்கட்குச் சேவை செய்து அதனால் கிடைக்கின்ற பேரின்பத்தைத் தன் சந்ததியாரே அனுபவிக்க வேண்டு

மென்றுதானே விரும்புகின்றார். சேவையின் காரணமாக, தியாகத்தின் மூலமாகப் பெறுகின்ற இன்பமே உலகத்தில் சிறந்தது, ஈடு இணையற்றது. தியாகத்தின் மணிமுடியாக விளங்கும் சுய நலம் இது.

இதைக் கேட்ட வசிட்டர் முன் நிகழ்ந்த சம்பவமொன்றை நினைவு படுத்திக் கொள்ளுகிறார்.

அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசை
மலையென விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பனென்(று)
உலைவுறும் அமரருக்(கு) உரைத்த வாய்மையை.

[நடுவண் - நடுவிலே; ஓர் - ஒப்பற்ற; அனந்தன் - ஆதிசேஷன்; மீமிசை - மேலே; முகில் - மேகம்; உலைவுறும் - வருத்தம் மிக்க; வாய்மை - வாக்குறுதி.]

கொடுமையே உருவெடுத்து வந்த அரக்கர்களைக் கொன்று தேவர்களைக் காப்பதாக மலைபோல் உறங்கும் மாமுகில்வண்ணன் வரங்கொடுத்த காட்சியைக் காண்கிறார்.

மசரதம் அனையவர் வரமும் வாழ்வும்ஓர்
நிச(ம்)ரத(ம்) கணைகளால் நீறு செய்யயாம்
கச(ம்)ரத(ம்) துரக(ம்)மாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி.

[மசரதம் அனையவர் - மாயத் தன்மையுள்ளவர்கள்; ஓர் நிசம் ரதம் கணைகளால்-ஒப்பற்ற சொந்தமான சாரமுள்ள பாணங்களினால்; நீறுசெய்ய-பொடிபடுத்தும்படி; மதலை - புத்திரன்; தாரணி - பூமி.]

'தசரதன் புத்திரனாக அவதரிப்பேன்' என்று அவன் அன்று கூறியதை மனக் கண்ணாலே காண்கின்றார். எதிரே பிள்ளையில்லையென்ற பெருங்குறையுடன் நிற்கின்றார் தசரதர். அவன் வாக்கு நடக்கவும், இவர் குறை நிறையவும் காலம் வந்துவிட்டதை எண்ணிப் பார்க்கின்றார்.

புத்திரன் பிறப்பதற்குரிய யாகத்தைச் செய்யுமாறு கூறுகிறார்.

யாகம் நிகழ்ந்தது. மகிழ்ச்சியிலே பொன்னையும் மணியையும் அள்ளி அள்ளி வழங்கினார் தசரதர். தேவையுள்ளவர்கள் வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளும்படி பொக்கிஷத்தைத் திறந்து வைத்து விட்டார்.

கருமுகில் கொழுந்துஎழில்
காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள்
திறங்கொள் கோசலை.

கோசலையினிடத்தே இராமன் பிறந்தான். கைகேசி பரதனை ஈன்றெடுத்தாள். சுமித்திரை லட்சுமணனையும் சத்ருக்கனனையும் பெற்றாள்.

தசரதனுக்குப் பிள்ளைகள் பிறந்தனர் என்று கேள்வியுற்றதும் 'அரக்கர்கள் அழிந்தனர்' என்ற மகிழ்ச்சியால் ஆடினர் அரம்பையர்; அமுதம் போன்ற ஏழிசையையும் பெருக்கினர் கின்னரர். வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் அங்குமிங்கும் ஓடி ஆனந்தக் களிப்பெய்தினர்.

தசரதர் மகிழ்ச்சி மிகுதியிலே பொருளை வாரி வாரி இறைத்தார்; ஆலயங்களுக்குக் கொடுத்தார்;

கொடுத்துக் கொடுத்து ஆனந்தப்பட்டார்; ஏழாண்டு கட்கு வரியை நீக்கிவிட்டார்; சிற்றரசர் மகிழ பல காரியங்கள் செய்தார்.

நகர மாந்தர்கள் எப்படியெல்லாம் களிப்புக் கொள்கிறார்களென்று பாருங்கள்.

ஆர்த்தனர் முறை முறை
யன்பி னுல்,உடல்
போர்த்தன புளகம்,வேர்
பொடித்த, நீள் நிதி
தூர்த்தன(ர்) எதிர்எதிர்
சொல்லி னுர்க்கெலாம்;
தீர்த்தன்என்(று) அறிந்ததோ
அவர்தம் சிந்தையே.

[ஆர்த்தனர்-ஆரவாரித்தார்கள்; போர்த்தன புளகம்-(உடலை) சந்தோஷம் மறைத்தது; வேர்பொடித்த-வியர்வை நீர்த்துளிகள் அரும்பின; நீள்நிதி-மிகுந்த திரவியத்தை; தூர்த்தனர்-அள்ளிக் கொடுத்தார்கள்; தீர்த்தன்-திருமால்.]

இப்படி யெல்லாம் ஆடிப்பாடி மகிழ்கிறார்களே, ஏன்? 'திருமாலே வந்து அவதரித்து விட்டான்' என்று அவர்கள் மனம் அறிந்ததோ என்று கவிஞன் கேட்கிறான்.

தசரதருக்கு இராமன் மீது அளவு கடந்த அன்பு. தம்முடைய உயிரும் உடலும் அவனே என்று எண்ணினர்.

காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை அல(து),ஓர்
ஆவியும் உடலமும் இலதென, அருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்.

[காவி - நீலோற்பல மலர்; எழில் - அழகு.]

இராமனும் அவன் தம்பிமார்களும் வளர்ந்து கலைகளைக் கற்கும் வயதினை யடைந்தனர். வசிட்டரே குரு. அரசர்க்குரிய கலைகள் யாவையும் உணர்ந்தனர்.

இராமனும் இலக்குமணனும், நெய்கின்ற குழலுடனே விடாது பொருந்திய நூல் இழைபோல் சேர்ந்திருந்தனர். பரதனும் சத்ருக்கனனும் இணைபிரியாதிருந்தனர்.

இராமனுக்கு நகரத்தவர் மீது அளவு கடந்த பற்றுதல். அவர்களுடைய நலனை விசாரிப்பதிலே அக்கறை.

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா,
'எதுவினை? இடரிலை? இனிதுநும் மனையும்
மதிதரு குமரரும் வலியர் கொல்?' எனவே.

[முதிர்தரு - மிக்க; ஒளிரா - ஒளிர்ந்து; வினை - தொழில்; மனை - மனைவி; மதிதரு - அறிவு பெற்ற; வலிமைகொல்-வலிமை யுடைவரா யிருக்கின்றனரா?; எனவே-என்று கேட்க.]

ராமனாகிய பாத்திரத்தை மிக மிக உயர்ந்த முறையில் சிருஷ்டிக்கக் கவிஞன் விரும்பியிருக்கிறான். எதிர் வருபவர்களை கருணையுடன் முகம் மலர்ந்து, "நீங்கள் சுகமா? மனைவி சுகமா? உங்கள் தொழில் யாது? ஏதாவது துன்பமுண்டா? புத்திரர் சுகமா? வலிமையுடையவர்களா யிருக்கிறார்களா?" என்றெல்லாம் கேட்கிறான்.

ஒரு இளவரசன், நாளை அரசனாக வேண்டியவன் எப்படிப்பட்ட மனத்தினனா யிருக்க வேண்டுமென்று கவிஞன் கூறுகிறான். அவன் வீரனாதலாலே 'பிள்ளைகள் வீரமுடையவரா யிருக்கிறார்களா?' என்று வினவுகிறான். இராமனைக் கருணையின் வடிவமாக சிருஷ்டித்திருக்கிறான் கம்பன்.

அஃதுஐய, நினையெம(து) அரசென உடையேம்
இஃதொரு பொருளல; எமது(உ)யி ருடன்ஏழ்
மகிதல முழுதையும் உறுகவி மலரோன்
உகுபகல் அளவென உரைநனி புரிவார்.

[இஃது ஒரு பொருளல்ல - (ஒரு குறையுமின்றி வாழ்தல்) பெருங் காரியமன்று; உறுக - ஆட்சி செய்க; மலரோன் உகுபகல் அளவு - பிரமன் அழியுங்காலம் மட்டும்.]

"உன்னை அரசனாகப் பெற்ற எங்கட்கு என்ன குறை? ஏழுலகத்தையும் எங்கள் உயிரையும் உலகம் அழியுமட்டும் ஆட்சி செய்வாயாக!" என்று வாயார வாழ்த்திச் செல்கின்றனர் பொதுமக்கள்.

முற்றிற்று

பாட்டு முதற் குறிப்பகராதி

பாட்டு	பக்கம்
அஃது ஐய நினை	64
அம்பிலே சிலையை	2
அரங்கிடை	47
அலைகடல் நடுவண்	60
அறுபதி னுயிரம்	59
அறையும் ஆடரங்	9
ஆச லம்புரி	12
ஆர்த்தனர் முறை	62
ஆலவாய்க் கரும்பின்	26
இடங்கொள்	32
இம்பர் நாட்டில் செல்வம்	3
இரவி தன்குலத் (து)	17
இறங்குவ, மகரயாழ்	46
ஈய்ந்தே கடந்தான்	54
உலகம் யாவையும் தாம்	4
எதிர்வரும் அவர்களை	63
எய்யென எழு	57
ஏகம் முதற்	51
ஓசை பெற் (று)	5
கல்லாது நிற்பார்	51
கல்விடைப் பிறந்து	19
கலம்சு ரக்கும்	35
காவியும் ஒளிர்தரு	62
குயிலினம்	29
குழலிசை	46
கூற்றம் இல்லை	36
கோதைகள் சொரி	38

பாட்டு	பக்கம்
சேலுண்ட ஓண்க	28
தண்டலை மயில்க	24
தணிமலர்த் திரு	48
தாதுகு சோலை	19
தாயொக்கும்	53
தாலிஜம்படை	38
திங்களும் கரிதென	44
துறைய டுத்த	7
தெள்வார் மழை	50
தெள்விளிச் சிறுயாழ்	26
தோயும் வெண்தயிர்	33
நீற ணிந்த கடவுள்	14
பம்பி மேகம்	14
புள்ளி மால்வரை	15
பெருந்த டங்கண்	35
பொருந்திய மகளி	30
பொழுதுணர் அரிய	48
பொற்பில் நின்றன	39
பொன்திணி மண்டப (ம்)	45
மசரதம் அனையவர்	60
மன்னவர் தரு	49
முத்த மிழ்த்துறை	8
மூளைப்பன	49
முறை அறிந்து	31
வண்மை யில்லை	36
வயிரவான் பூண்	57
வரம் பெலாம்	23
வெள்ளமும்	55
வையம் என்னை	6